2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

செலவினத் தலைப்பு இல - 421

உள்ளடக்கம்

		பக்க இல.
அத்தியாயம் 01	- நிறுவகத்தின் விபரங்கள்/நிறைவேற்றுனர் சுருக்கவுரை	1-10
அத்தியாயம் 02	- முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு	11-25
அத்தியாயம் 03	- வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை	26-39
அத்தியாயம் 04	- செயலாற்றுகை சுட்டிகள்	41-42
அத்தியாயம் 05	- நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்கையடையும் செயலாற்றுகை	43-48
அத்தியாயம் 06	- மனித வள விபரம்	49-51
அத்தியாயம் 07	- இணக்க அறிக்கை	52-63

அத்தியாயம் 01

நிறுவகத்தின் விபரங்கள் / நிறைவேற்றுனர் சுருக்கவுரை

திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சானது, இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின், 2020.08.09 எனும் திகதியினையும் 2187/27 எனும் இலக்கத்தினையும் கொண்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலிற்கு அமைவுற செயற்படுகின்றது. தற்போது, அமைச்சானது இரண்டு பிரிவுகளாக செயற்படுகின்றது. அவையாவன, திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்கல்வி பிரிவு மற்றையது ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு என்பனவாகும். 2020 ஆம் ஆண்டின் முதற் பகுதியில், திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி பிரிவானது, திறன் அபிவிருத்தி, தொழில் வாய்ப்புக்கள் மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சின் கீழும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவானது உயர் கல்வி, தொழினுட்ப மற்றும் புத்தாக்க அமைச்சின் கீழும் செயற்பட்டது. மேற்கூறப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக, திறன் அபிவிருத்தி நிதியம், தேசிய அதி புலமை சொத்து அலுவலகம் (NIPO), இலங்கை தராதார அங்கீகாரச் சபை (SLAB) மற்றும் தொழினுட்ப மாற்றீடு பிரிவு (Vidatha) என்பன அமைச்சின் அகப்பாட்டெல்லையிலிருந்து அகற்றப்பட்டன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைச்சின் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்கல்வி பிரிவு, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு எனும் இரு பிரிவுகளுக்குமான வருடாந்த செயலாற்றுகை விபரமானது இவ்வறிக்கையில் வெவ்வேறு பிரிவுகளாக வகுத்துக் காட்டப்பட்டுள்ளது.

1.1. திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்கல்வி பிரிவு

1.1.1. அறிமுகவுரை

அரசின் "நாட்டை கட்டியெழுப்புவதற்கான சுபீட்சத்தின் நோக்கு" என்ற கொள்கை பிரகடனத்திற்கும் மற்றும் 2020.08.09 எனும் திகதியினையும் 2187/ 27 எனும் இலக்கத்தையும் கொண்டதுமான வர்த்தமானி அறிவித்தலிற்கும் அமைவுற இந்த அமைச்சிற்கு உரித்தென்ற வகையில் 2020 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட கடமைகள் மற்றும் பொறுப்புக்களினை நிறைவேற்றம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகளாவன முறையாக எடுக்கப்பட்டன. இதற்கமைவுற, அக மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தையில் நாளாந்தம் மாறுகின்ற கேள்விக்கு ஏற்ற வகையில் திறனுடன் கூடிய தொழினுட்ப வல்லுனர்களினை உற்பத்தி செய்யும் பொருட்டு இந்த அமைச்சின் அகப்பாட்டெல்லைக்குள் உள்ளடங்குகின்ற தொழிற் பயிற்சி நிறுவகங்களுடன் இணைந்து பல்வேறு வகையான நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டன. இச்செயற்பாடுகளின் பிரதான நோக்கானது, இலங்கை சார் இளைஞர்களினை உயர் சம்பளத்துடனும் சமூகத்தில் உரிய அந்தஸ்த்துடனும் மற்றும் திறனுடனும் கூடிய தொழினுட்ப வல்லுனர்களாக மாற்றுவதற்குரிய பாதையினை திறத்தலும் அப்பாதையினை விரிவு படுத்தலுமாகும். இந்த நடவடிக்கைகளின் மூலம், கல்வித் தகைமையினை பொருட்படுத்தாது கற்பதற்கு இலகுவான முறையில் கற்கை நெறியினை வடிவமைத்து, தொழிற்கல்வி பயிற்சியினை வழங்குவதனூடாக பயிற்றுவிக்கப்படாத தொழிலாளர்கள் தொழிற் சந்தையில் உள்ளீர்க்கப்படலினை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் இந்த வருடத்தின் பாதீட்டு முன்மொழிவுகளினூடாக பெற்றுக் கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டு தொகைகளினை பயன்படுத்தி, தொழிற்கல்வியினை பயிலும் மாணவர்களினால் முகம் கொடுக்கப்படக்கூடிய நிதியியல் ரீதியிலான அசௌகரியங்களினை அவர்கள் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு அவர்களுக்கு இடைக்காலப் படியும் வழங்கப்படுவதற்கு உத்தேசித்துள்ளமை ஒரு பெரிய சாதனையாகும்.

தொழிற் சந்தையுடன் தொடர்புற்ற வகையில் நாடளாவிய ரீதியிலுள்ள சகல பயிற்சி நிலையங்களும் TVET கருதுகோள் எனப்படும் ஒரு வலையமைப்பின் கீழ்

கொண்டுவரப்பட்டதோடு, இதன் கீழ் கற்பிக்கப்படும் சகல கற்கை நெறிகளுக்கும், தேசிய தொழிற் தகைமை மட்டத்தில் (NVQ) சான்றிதழ்கள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் முன்னெடுக்கப்படவுள்ள கற்கை நெறிகளினை உயர் தரமானதாகவும் அத்துடன், ஒரு நேர சட்டகத்திற்கு அமைவுற்றதாகவும் முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், கைத்தொழிற்துறையில் நிலவும் தொழிலுக்கு ஏற்ற வகையில், மாணவர்களின் மனித வள திறன்களினை (Soft Skills) நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு, தனியார் துறையினர்களுடனும் கைத்தொழிற் துறையாளர்களுடனும் பேணப்படும் தொடர்புகளினை வலுப்படுத்துவதனூடாக பயிற்றுவிக்கப்பட்ட பயிலுனர்களினை தொழிலில் அமர்த்துவதற்கும் நடவடிக்கைகளினை எடுத்தல்.

மேலும், நாடளாவிய ரீதியிலுள்ள தொழினுட்பவியல் கல்லூரிகள், தொழினுட்பவியல் பயிற்சி நிறுவகங்கள் மற்றும் கல்லூரிகளின் பௌதீக வளங்களினை மேம்படுத்துவதற்கும் மற்றும் பயிற்சி நிறுவகற்களின் வலையமைப்பை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

1.1.2. நோக்கம் மற்றும் செயற்பணி

நோக்கு

“திறன்மிகு தொழிலாளர் வகுதி”

பணி

உயர்தரமான தொழினுட்பவியல் மற்றும் தொழிற் கற்கை பயிற்சியினை வழங்குவதனூடாக ஒரு மனிதவள அடிப்படையினை விருத்தி செய்தல்.

1.1.3. பிரதான செயற்பாடுகள்

திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரிவின் செயற்பாடுகள்

- திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி நிலையத்துடன் தொடர்புற்ற வகையில் கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களினை முறைவடிவமாக்கம் செய்தல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- பாடசாலை கற்கைக்கு பின்பு பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெறாத மாணவர்களினை கருத்திற்கொண்டு, அவர்கள் உரிய முறையில் தொழினுட்ப மற்றும் தொழிற்கல்வியினை பெற்று அவர்கள் பயனுறுதி மிக்க தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களினை ஏற்படுத்தும் வகையில் கொள்கைகளினை தயாரித்தலும் வசதிகளினை ஏற்படுத்திக் கொடுத்தலும்.
- தொழினுட்ப, தொழினுட்பவியல் மற்றும் தொழிற்கல்வி முறைமைகளினை புதுப்பித்து அதனை மாற்றியமைத்தல், தொழிற்சந்தையின் நாளாந்த மாற்றங்களுக்கு ஏற்றவகையில் தகைமை மிக்க தொழிலாளர் வகுதியினை உருவாக்குவதற்குரிய பயிற்சிகளினை வழங்கல்.
- பயிலுனர்கள் பயிற்றப்படுவதற்கான வாய்ப்புக்களினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- தொழிற்பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதற்கான கிரம முறைகளினை முறைவடிவமாக்கம் செய்தலும் அமுல்படுத்தலும்.
- நியதிச்சட்டமுறை நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சகல விடயங்களுடன் தொடர்புடைய நடவடிக்கைகளினையும் பின் தொடர்ந்து கண்காணித்தல்.
- அரச மற்றும் தனியார் துறை தொடர்பிணைப்பை வலுப்படுத்துதல்.
- தொழில் முயலுமை திறமை விருத்தி செய்தல்.

வர்த்தமானி அறிவித்தல்களுக்கமைவுற விசேடமாக முன்னுரிமையளிக்கப்பட வேண்டிய விடயங்கள்

- கல்வித் தகைமைகள் கருத்திற் கொள்ளப்படாது, தொழினுட்பவியல் மற்றும் உயர் தொழிற்கல்வி என்பனவற்றை வழங்கக்கூடிய வகையில் ஒரு புதிய நிகழ்ச்சித் திட்டத்தை தொடங்குதல்.

- சகல தொழிற்கல்வி பயிற்சி நிலையங்களிலும், ஒரு குறிப்பிட்ட அடிப்படையில் முறை சார்பிலான மதிப்பீடுகளினை முன்னெடுத்தல். அத்துடன் சகல நிறுவனங்களினையும் "One TVET'' என்ற கருதுகோளின் கீழ் கொண்டு வருவதற்கு ஏற்றவகையில் நிறுவனங்களில் பௌதிகவியல் ரீதியிலான மாற்றங்களையும் மற்றும் பாடத்திட்டத்தில் மாற்றங்களையும் செய்வதுடன் அந்த நிறுவனங்களினை தொழினுட்பவியல் பட்டங்களினை வழங்கும் நிறுவனங்களாக மாற்றுதல்.

- நாடளாவிய ரீதியிலுள்ள தொழினுட்வியல் மற்றும் தொழினுட்வியல் பல்கலைக்கழக கல்லூரிகளினை உள்ளடக்கி ஒரு புதிய வலையமைப்பினை தாபித்தல்.

- சிலோன் ஜேர்மன் தொழினுட்பவியல் பயிற்சி நிறுவகத்தினை விஸ்தரித்தல்.

- தேசிய தொழிற்கல்வி சான்றுபடுத்துகையினை (NVQ) 7 இலிருந்து 10 வரைக்கும் அதிகரித்தலுடன் அதற்கேற்ப இலங்கை தகைமை சட்டகப் பணியினை (SLQF) திருத்தி அமைத்தல்.

- தொழிற்கல்வியினை பட்டப்பின்படிப்பு மட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கான வாயப்புக்களினை வழங்கல்.

- தகவல் தொழினுட்பம், ஆங்கிலம் மற்றும் ஏனைய மொழிகளின் அறிமுகப்படுத்துகையினை தொழிற்கல்விக்கான பாடத்திட்டத்தில் உள்ளீர்ப்பதுடன் தொழிற்கல்வி மற்றும் தொழில் முயலுமை ஆகிய இரண்டினையும் ஒன்றிணைத்து தொழிற்கல்விக்கான பாடத்திட்டத்தை திருத்தியமைத்தல்.

- வெளிநாட்டு தொழில்வாய்ப்பு, மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் அமைச்சுடன் கூட்டிணைந்து, அக மற்றும் வெளிநாட்டு தொழில் சந்தைகளினை இலக்காகக் கொண்டு தொழிற்கல்வியினை வழங்க நடவடிக்கைகளினை எடுத்தல்.

- தகவல் தொழினுட்ப தொழில் முயலுமையினை தாபித்தல்.

1.1.4. அமைப்பாண்மை கட்டமைப்பு



1.1.5 அமைச்சின் கீழ் அடங்கும் திணைக்களம்

- தொழினுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் (DTET)

1.1.6 அமைச்சின் கீழ் அடங்கும் நிறுவகங்கள்

- மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC)
- இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை (VTA)
- தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை (NAITA)
- இலங்கை - ஜேர்மனி தொழினுட்பப் பயிற்சி நிறுவகம் (CGTTI)
- தொழில்துறை, தொழினுட்பப் பல்கலைக்கழகம் (UNIVOTEC)
- இலங்கை சமுத்திரம்சார் பல்கலைக்கழகம்(OUSL)
- தேசிய வர்த்தக முகாமைத்துவ பசுமைப் பல்கலைக்கழகம்(NSBM)
- தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம் (NIBM)
- இலங்கை அச்சக நிறுவகம் (SLIOP)

1.1.7. வெளிநாட்டு நிதியீடு கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள்

கருத்திட்டத்தின் பெயர்	அமுல்படுத்துகை செய்யும் முகவராண்மை	கருத்திட்டத்தின் மதிப்பீட்டு கிரயம்	கருத்திட்டத்தின் கால வரையறை
பொருளாதார வளர்ச்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான திறன் (S4G)	அவுஸ்திரேலியா அரசாங்கம்	15 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்	2016 டிசம்பரில் இருந்து 2020 வரையில்
இலங்கை கருத்திட்டத்தில் தொழில் பயிற்சி - GIZ	ஜேர்மனிய அரசாங்கம்	7 மில்லியன் யூரோ	2019 ஜூலையில் இருந்து 2022 ஜூன் வரையில்
இலங்கை இளைஞர் தொழில் வாய்ப்பு மற்றும் வியாபாரங்களினை தொடங்குவதற்கான கருத்திட்டம் USAID - YouLead	ஐக்கிய அரசு	18 மில்லியன் அமேரிக்க டொலர்	2017 ஜூன் 02 ஆம் திகதியிலிருந்து 2024 மே 31 வரையில்
திறன் துறை அபிவிருத்தி கருத்திட்டங்கள்	ADB/WB/இலங்கை அரசாங்கம்	398.41 அமெரிக்க டொலர்	2014-2020
கொழும்பில் தொழில் பயிற்சி நிலையத்தை தாபித்தலும் கம்பஹாவில் உள்ள தொழினுட்பவியல் கல்லூரியின் தரத்தை மேம்படுத்தலும்	EDCF of Exim கொரிய வங்கி	26 அமெரிக்க டொலர்	2014-2020
கட்டுநாயக்காவில் உள்ள எந்திரவியல் தொழினுட்பவியல் நிறுவகத்தின் தரத்தை மேம்படுத்தல்	ஆஸ்திரியா அரசு	9.5 மில்லியன் யூரோ	2018 - 2020

1.2. ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு

1.2.1. அறிமுகவுரை

அபிவிருத்தி செயன்முறையில் இன்றுவரை பிரதான வழிநடத்தியாக இருந்து வருவது விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் புத்தாக்கமே ஆகும் என்பதுடன் இது, நாட்டின் சகல துறைகளும் அபிவிருத்தி தொடர்பில் தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய மட்டத்தில் முகம் கொடுக்கும் பிரச்சனைகளுக்கு தீர்வினை வழங்கக் கூடியதாக உள்ளது. அறிவினை அடிப்படையாக கொண்டதொரு சமுதாயத்தினை கொண்டதொரு நாட்டில், அதன் பொருளியல் வளர்ச்சியினை தூண்டி சிறந்த பொருளாதார வளர்ச்சியினை காண்பதற்கு அங்கு புதிய அத்துடன் வளர்ந்து வரும் தொழினுட்பங்களில் (அதாவது உயிர் தொழினுட்பம், நனோ தொழினுட்பம், தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பன முன்னெடுக்கப்பட்டு அத்துறை விருத்தி செய்யப்பட வேண்டியது இன்றியமையாததொன்றாகும். நிலைபேறான அபிவிருத்தி என்ற அடிப்படையில் நோக்குமிடத்து, தொழினுட்ப ரீதியாக, சுற்றாடல் ரீதியாக மற்றும் பொருளாதார ரீதியாக ஏற்படக்கூடிய பல சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு புதிய அத்துடன் வளர்ந்து வரும் தொழினுட்பங்கள் இன்றியமையாததாகும். நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் ஏற்படக்கூடிய இக்கட்டான நிலைகளில் அதாவது புதுப்பிக்கத்தக்க சக்தியின் ஊடாக காலநிலை மாற்றமும் சக்தி சேமிப்பு தொழினுட்பமும், தூய நீர், கழிவு நீர் முகாமைத்துவம், உணவுக்காப்பு, விவசாய உற்பத்தியினை மேம்படுத்தல், நோய்களினை தடுத்தலும் நியாயமான விலையில் சுகாதார நலன்புரி சேவைகளினை வழங்கல் போன்ற பிரச்சனைகளுக்கு உடனடியாக சாத்தியப்படக்கூடிய கிரயப் பயனுறுதி மிக்க அத்துடன் புது முறை தீர்வுகளினை இப்புதிய அத்துடன் வளர்ந்து வரும் தொழினுட்பங்கள் தரக்கூடியவை.

எவ்வாறாயினும் ஒப்பீட்டளவில் நோக்குமிடத்து இலங்கையானது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் மிக குறைந்தளவு முதலீட்டினை செய்த போதிலும் அதாவது மொத்த அக உற்பத்தியில் 0.1 இனை செய்த போதிலும் திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சின் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவானது தேசிய அபிவிருத்தி இலக்குகளுக்கு குறிப்பிட்டு சொல்லத்தக்களவு பங்களிப்பினை ஆராய்ச்சி, அபிவிருத்தி, புத்தாக்கம் மற்றும் புதுக் கண்டுபிடிப்புக்கள் மற்றும் உற்பத்தி வடிவமைப்பு எந்திரவியல் என்பனவற்றின் ஊடாக வழங்குகின்றது. இதன் அடிப்படையில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவானது, கேள்வியினை உடைய ஆராய்ச்சிகள், கைத்தொழில் துறை மற்றும் ஆராய்ச்சிகளை இணைத்து செயற்படக்கூடிய புதிய கண்டுபிடிப்புக்கள், மற்றும் தொழினுட்ப வினைமுயலுமைக்கு நிதி ரீதியாகவும் மற்றும் தொழினுட்ப ரீதியாகவும் ஆதரவு வழங்கக்கூடிய சூழல் என்பனவற்றினை என்பனவற்றினை மேம்படுத்துவதில் அதிக அவதானத்தினை செலுத்துகின்றது. மறுபுறத்தில் நோக்குமிடத்து, இப்பிரிவானது உயிர் தொழினுட்பம், நனோ தொழினுட்பம், விண்வெளி தொழினுட்பம், மனித எந்திரவியல், செயற்கை புத்திசாதுர்யம் போன்ற இதர பல வளர்ந்து வரும் தொழினுட்பங்களினை பயன்படுத்துவதற்கும் அதனை விருத்தி செய்வதற்கும் அதிக கவனத்தினை செலுத்துகின்றது. மேலும் சம்பந்தப்பட்ட நேர் அமைசுக்களுடன் இணைந்து, பல் வேறுபட்ட நடவடிக்கைகளின் ஊடாக அதாவது விஞ்ஞானம், தொழினுட்பம், எந்திரவியல் மற்றும் எண்கணித கற்கையினை (STEM EDUCATION) மேம்படுத்தல் மற்றும் தொழினுட்பத்தினை அடிப்படையாக கொண்ட பாடத்திட்டத்தின் விருத்தி, போன்ற செயற்பாடுகளின் மூலம் விஞ்ஞானத்தினை பிரபல்யப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளினை இப்பிரிவு எடுக்கின்றது.

1.2.2. நோக்கம் மற்றும் செயற்பணி

நோக்கம்

விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் புத்தாக்கத்தினூடாக 2030 ஆம் வருடமளவில், இலங்கை அபிவிருத்தியடைந்ததொரு தேசமாகுவதற்கு தலையாய அமைப்பாக இருத்தல்.

செயற்பணி

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி தேவைப்பாடுகளுக்கு இன்றியமையாத உயர்தரம், உற்பத்தி மற்றும் பொருளாதார செயற்பாடுகளை நிச்சயம்

செய்துகொள்வதற்கு விஞ்ஞான ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் தொழினுட்ப மாற்றீடுகள் உள்ளடங்கலாக விஞ்ஞான மற்றும் தொழிற்பாட்டினை மேம்படுத்தலுடன் தொடர்புடைய கொள்கைகளை முறைவடிவமாக்கம் செய்தலும் அமுல்படுத்தலும்.

1.2.3. பிரதான செயற்பாடுகள்

ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவின் செயற்பாடுகள்

- கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களினை முறைவடிவமாக்கம் செய்தல் மற்றும் விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் ஆராய்ச்சி ஆகிய விடயங்களினையும் அத்தோடு நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் அகப்பாடெல்லைக்குள் அடங்கும் ஏனைய விடயங்களினையும் கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும்.
- விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பத்தில் சர்வதேச மட்டத்தில் முன்னெடுக்கப்படும் ஆராய்ச்சிகள் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களுக்கு சமனாக அக ஆராய்சிகள் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள் அமைவதற்கு தேவையான வகையில் வசதிகளினை வழங்கல்.
- அறிவு சார்ந்த பொருளாதாரம் ஒன்றினை விருத்தி செய்வதற்கு விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகிய விடயங்களில் விழிப்புணர்ச்சியினை மேம்படுத்தல்.
- விஞ்ஞான, தொழினுட்ப, சமூக மற்றும் பொருளாதார ஆராய்சிகளினையும் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளினையும் விஸ்தீரணம் செய்வதற்கு தேவையான வழிமுறைகளினை இணைத்துக்கொள்ளல்.
- ஆராய்ச்சிகளினை திட்டமிடவும் அவற்றினை முன்னெடுத்துச் செல்வதற்கும் தேவையான வசதிகளினை வழங்கல்.
- நனோ தொழினுட்பம் மற்றும் உயிரியல் தொழினுட்பம் போன்ற துறைகளில் கண்டுபிடிக்கப்படும் புது கண்டுபிடிப்புக்கள் மற்றும் ஆராய்ச்சிகள் உள்ளடங்கலாக புதிய ஆராய்ச்சிகள் மற்றும் புது கண்டுபிடிப்புக்கள் தொடர்பிலான விபரங்களினை வியாபாரம் சமூகம் உள்ளடங்கலாக சம்பந்தப்பட்ட பணயப்பொருளாலர்களுக்கும் வழங்கல்.
- ஏனைய அமைச்சுக்களின் அகப்பாடெல்லைக்குள் அடங்கும் ஆராய்ச்சி நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் ஆராய்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தொழினுட்பவியல் ஆதரவுகளினை வழங்கல்.
- சமூகம் புது கண்டுபிடிப்புக்களினை கண்டு பிடிக்கும் திறன் கொண்டவர்களாக்குவதற்கு அவர்களினை ஊக்குவித்தலும் வழிநடத்தலும்.
- விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகிய விடயங்களில் சமூகத்தினரின் அறிவினை மேம்படுத்தலும் தொழில் முயலுனர்களினை உருவாக்கலும்.
- இலங்கையில் உள்ள சகல ஆராய்ச்சி நிறுவனங்களுடன் கூடிணைவதன் மூலம் தேசிய அபிவிருத்தி இலக்குகளினை சாதிப்பதற்கு உயர்ந்த அளவில் பங்களிப்பு செய்தல்.
- சர்வதேச மட்டத்தினை சார்ந்த விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் கூட்டிணைந்து இணை நிகழ்ச்சிச் திட்டங்களினை அமுலாக்கம் செய்தல்.
- பலதரப்பட்ட நாடுகளுடன் விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் ஆராய்ச்சிகளின் ஊடாக இரு தரப்பு மற்றும் பல் தரப்பு கூட்டிணை செயற்பாடுகளினை அறிமுகப்படுத்துவதன் மூலம் பொருளாதார ரீதியில் முன்னேற்றத்தினை சாதித்தல்.
- நிர்மாணத்துறையினை மேம்படுத்தவும் விருத்தி செய்யவும் ஆராய்ச்சிகளினை முன்னெடுத்தல்.

வர்த்தமானி அறிவிப்பில் அடையாளம் காணப்பட்ட சிறப்பு முன்னுரிமைகள்

- புது முறையில் சிந்தித்தல், செயற்கை புத்தி சாதுர்யம், உயிர் தொழில் நுட்பவியல், மனித எந்திரவியல், யதார்த்த நிலைகளினை தெளிவாக எடுத்துக்காட்டல், மேக கணிப்பீடு, நனோ தொழினுட்பம் மற்றும் முப்பரிமாண அச்சிடுகை ஆகியவற்றினை மேம்படுத்துவதன் ஊடாக இலங்கையினை புத்தாக்கத்தின் மைய நிலையமாக தாபிக்க முனைதல்.

- ஆராய்ச்சியாளர்களுக்கு அவர்களது புத்தாக்கங்களுக்கு காப்புரிமை வழங்கல் எனும் செயன்முறையினை வினைத்திறன் கொண்டதாக்குதல் மற்றும் அவர்களது ஆராய்ச்சிகளுக்கு உரிமையாண்மையினை பெற்றுக்கொடுத்தல்.

- சர்வதேச ஆராய்ச்சி நிறுவனங்களுடன் கூடிணைந்து பணியாற்ற அக ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வாய்ப்பு மற்றும் வசதிகளினை ஏற்படுத்தி கொடுத்தல்.

- ஆராய்சிகளுக்கு பங்களிப்பு செய்யும் தனியார் நிறுவனங்களுக்கு வரிச்சலுகை வழங்கல்.

- வர்த்தக நாமத்தில் புது முறையினை பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபடக்கூடிய அக அல்லது வெளிநாட்டு முதலீட்டாளர்கலினை அறிமுகப்படுத்துதல்.

- புது கண்டுபிடிப்புக்கள் மற்றும் ஆராய்ச்சி பெறுபேறுகளினை, புத்தாக்குனர்கள் மற்றும் அதனை பயன்படுத்தக் கூடியவர்கள் ஆகியோருக்கு வினைத்திறன் மிகு கிரம முறையினை அறிமுகப்படுத்தல்.

1.2.4. அமைப்பாண்மை கட்டமைப்பு



1.2.5. ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவின் கீழ் செயற்படும் நிறுவகங்கள்

1. நவீன தொழினுட்பவியலிற்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகம் (ACCIMT)
2. கைத்தொழில் தொழினுட்ப நிறுவகம் (ITI)
3. தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (NERDC)
4. தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகம் (NIFS)
5. தேசிய ஆராய்ச்சி மன்றம் (NRC)
6. தேசிய விஞ்ஞான மன்றம் (NSF)
7. தேசிய விஞ்ஞான தொழினுட்ப ஆணைக்குழு (NASTEC)
8. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு (SLIC)
9. இலங்கை கோள் மண்டலம்
10. இலங்கை நனோ தொழினுட்பவியல் நிறுவகம் (SLINTEC)

1.2.6. வெளிநாட்டு நிதியீடு கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் (ஏதேனும் இருப்பின்)

பொருத்தமற்றது

அத்தியாயம் 02

முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1. திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்கல்வித்துறை

2.1.1 2020 ஆம் ஆண்டில் தொழினுட்பவியல் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி நிலையத்தின் சாதனைகள்.

- "13 வருட தொடர்கல்வி" நிகழ்ச்சித் திட்டத்தின் 3 ஆவது கட்டமானது, 311 பாடசாலைகளில் அமுல்படுத்துகை செய்யப்பட்டது. இக்கால கட்டத்தின்போது, கல்வி அமைச்சினூடாக 5171 மாணவர்கள் தொழிற்கல்வி பயிற்சிக்கு இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

- தொழினுட்ப மற்றும் தொழிற்கல்வித் துறையில் ஓர் ஆராய்ச்சி கலாச்சாரத்தை உரவாக்குதல் வேண்டும் என்ற இலக்குடன் நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதோடு, தொழிற்கற்கை பயிற்சித் துறையில் கண்டுபிடிக்கப்பட்ட ஆராய்ச்சி தேடல் ஒன்று தொடர்பில் ஓர் ஆராய்ச்சி கருத்தரங்கினை முன்னெடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

- பொலநறுவையிலுள்ள தேசிய தொழிற்கல்வி பயிற்சி நிறுவகத்தின் கருத்திட்ட அலுவலகத்திற்கு பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினது அனுமதி பெறப்பட்டதனை தொடர்ந்து, சம்பந்தப்பட்ட பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகளினை நடாத்துவததற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- ஜேர்மன் தொழினுட்பவியல் கல்லூரி ஒன்றினை மாத்தறையில் நிர்மாணிப்பதற்காக மாத்தறையிலுள்ள நிலம் ஒன்றினை மாற்றீடு செய்தலிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதுடன், இது தொடர்பில் 15.7 மில்லியன் யூரோ கடன் தொகை தொடர்பில் ஜேர்மனிய அரசுடன் உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திடுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- சிலோன் ஜேர்மன் தொழினுட்பவியல் பயிற்சி நிறுவகத்தின் சட்டத்தை திருத்தியமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- "இலங்கையில் GIZ தொழிற்கல்வி பயிற்சி" என்பதன் கீழ் தொழிற்பயிற்சியுடன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களினை அமுல்படுத்துகை செய்வதற்கும் மேம்படுத்துகை செய்வதற்கும் பெற்றுக் கொள்ளப்படுவதற்கிருந்த 7.0 மில்லியன் யூரோ கடன் தொகை தொடர்பில் கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் நடைமுறையாக்கம்.

- கட்டுநாயக்கவில் எந்திரவியல் தொழினுட்ப நிறுவக (IET) நிர்மாண கருத்திட்டத்தின் கீழ் விரிவுரையாளர் அறை, ஆய்வுகூட வசதிகளுடன் கூடிய மூன்று மாடிக் கட்டிடத்தின் நிர்மாணப் பணியானது பூரணப்படுத்தப்பட்டதோடு, இதற்கு மேலும் 1.6 மில்லியன் பெறுமதியினை ஆய்வுகூட உபகரணங்களும் வழங்கப்பட்டன.

- நவீன கைத்தொழிற்துறையின் தேவைப்பாடுகளுக்கு அமைவுற விடயங்களின் பாடத்திட்டமானது, IET யினால் விருத்தி செய்யப்படும் நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்பாடுகளாவன 2020 செப்டம்பர் மாதம் முடிவுக்கு கொண்டு வரப்படும்.

- KOICA நிதியீட்டின் கீழ் காக்காய் தீவிலுள்ள NARA வினது 11 ஏக்கர் நிலப் பரப்பினை இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்திற்கு நடாத்துவதற்கு மாற்றீடு

செய்வதற்கான பூர்வாங்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. கருத்திட்டத்தின் நடப்பு நிலையினை அறியச் செய்யும் பொருட்டு அமைச்சரவைக்கு இது தொடர்பில் குறிப்பு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

- கொவிட் 19 தீவிர பரவல் காலத்தின் போது தொழிற் கல்வித்துறையின் பயிற்சி நிலையங்களாவன மூடப்பட்டிருந்தன என்பதுடன், இதனைத் தொடர்ந்து அமைச்சானது நிகழ்நிலை, வாட்ஸ் அப், google வகுப்பறைகள், LMS என்பனவற்றின் ஊடாக வகுப்புக்களினை நடாத்தும்படி அறிவுறுத்தியதனைத் தொடர்ந்து சகல பயிற்சி நிலையங்களிலும் நிகழ்நிலை நிகழ்ச்சித் திட்டங்கள் தொடங்கின. நிகழ்நிலை பயிற்சியில் 659 பயிலுனர்கள் பயிற்சிப் பெற்றனர்.

- தொலைக்கற்கை தொடர்பிலான ஒரு செயல்திட்டம் மற்றும், தொழிற்கல்வி பயிற்சி நிலையங்களினை சீர்திருத்துவதற்கான முன்மொழிவுகள் அடங்கிய அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டு சனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- கொவிட் - 19 நோய் பரவல் காலத்தின் போது தொழிற்பயிற்சியினை தொடர்ச்சியாக நடாத்தும் பொருட்டு தொலைக்கற்கை முறையில் தொழிற் பயிற்சியானது நடாத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டு அவை VTA, NAITA, DTET மற்றும் CGTTI ஆகிய நிலையங்களில் நடாத்தப்பட்டது.

- கொவிட் - 19 நோய் பரவல் காலத்தில் "சென்ல் ஐ" மற்றும் "நேத்ரா" ஆகிய இரு தேசிய தொலைக்காட்சி அலைவரிசைகளில் தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் தொடர்பிலான விபரங்கள் வழங்கப்பட்டன.

- "கொவிட் தொற்று காலப்பகுதியின் போது புதிய அணுகுமுறைகளுடன் பணி உலகிற்கு மின் விஜயம்" எனும் தலைப்பில் ஒரு புதிய நிகழ்ச்சித் திட்டமானது ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமானது, தொழில் இழந்தவர்களுக்கும் தொழில் தேடுவோருக்கும் தொழில் வாய்ப்புகளினை வழங்கலாகும்.

- சனாதிபதி செயலணியின் கூட்டிணைவுடன் பல் செயலணி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் செயற்பாடுகள் தொடங்கின. இதனால் NAITA வின் ஊடாக குறைந்த வருமானத்தை பெறுகின்ற குடும்பங்களினை சார்ந்த 100,000 பயனாளிகள் பயனடைந்தனர்.

- சுயதொழில் வாய்ப்பு மேம்பாடு முயற்சிகள் (SEPI)

  இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீடங்குகின்ற தொழில் முயலுமை பயிற்சியில் பங்குபற்றிய பங்குபெறுனர்களுக்கு பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன என்பதுடன் அவர்களுக்கு 1% வட்டியில் 5 இலட்சம் கடன் வசதியும் வங்கியிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக்கடன் திட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்டவர்களுக்கு கடன்கள் வழங்கப்படுவதற்கு ரூபாய் 50 மில்லியன் மத்திய வங்கியினூடாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- You Lead கருத்திட்டம்
  You Lead கருத்திட்டமானது, USAID இனால் நிதியீடு செய்யப்படுவதுடன் இது இலக்கு செய்யப்பட்ட துறைகளில் இளைஞர்களின் தொழில் வாய்ப்பு திறனை அதிகரிப்பதற்கும் மற்றும் சுயதொழில்களின் மூலம் வெற்றி பெறக்கூடிய வாய்ப்பினை மேம்படுத்தவும் வடிவமைக்கப்பட்டதாகும். 2020 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் 196 பேர் கற்பிக்கும் கலையில் பயிற்சிகளினை பெற்றுக் கொண்டனர். 496 அறிவுறுத்துனர்களுக்கு தொழில் வழிகாட்டுகை மற்றும் மனித வளத்திறனில் (Soft Skills) பயிற்சிகள் வழங்கப்பட்டன. சமூக மற்றும் தலைமைத்துவ திறனில் 7739 இறைஞர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

- இலங்கையில் தொழிற்கல்வி பயிற்சி (VTN)

  வடக்கு, கிழக்கு மற்றும் மாத்தறையிலுள்ள பயிற்சி நிலையங்களுக்கு ஆதரவ வழங்குவதற்கு ஜேர்மனியின் GIZ ஆனது, 7.0 மில்லியன் யூரோவினை மானியமாக வழங்கியுள்ளது. கிளிநொச்சியிலுள்ள SLGTI, CGTTI அத்துடன் தெரிவு செய்யப்பட்ட ஏனைய NVTI என்பனவற்றிற்கு பயிற்சிகள் வழங்கப்படக்கூடிய சாதனங்கள் மற்றும் கருவிகள் என்பன வழங்கப்பட்டன.

- சகலவற்றையும் உள்ளடக்கிய வளர்ச்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கான திறன் (S4IG)

  சகலவற்றையும் உள்ளடக்கிய வளர்ச்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கான திறன் என்பது, இந்த அமைச்சுடன் இணைந்து அமுல்படுத்தப்பட்ட அவுஸ்திரேலிய அரசின் உதவி நிகழ்ச்சித் திட்டமாகும். இந்த நிகழ்ச்சித் திட்டமானது, திறன் அபிவிருத்திகளின் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையானது, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு (கிழக்கு மாகாணம்) மற்றும் பொலநறுவை (வடமத்திய மாகாணம்) ஆகிய நான்கு மாவட்டங்களின் சுற்றுலா மதிப்பீட்டு சங்கிலி உள்ளடங்களாக பொருளியல் வளர்ச்சி வாய்ப்புக்களுக்கு எந்தளவு ஆதரவு வழங்குகின்றது என்பதனை செய்கைமுறை விளக்கமளிப்பாக காட்டுகின்றது. S4IG ஆனது, நிலைபேறான அடிப்படையில் தொழில்கள் உருவாகப்படலிற்கும் அதன் மூலம் வருமானம் அதிகரிக்கப்படலிற்கும் அத்துடன் சமுதாயத்தில் ஓரங்கட்டப்பட்ட வளம்பெறாத இளைஞர்களுக்கும் குறிப்பாக பெண்கள் மற்றும் அங்கவீனர்களுக்கும் வியாபார விருத்திகள் ஏற்படுவதற்கு ஆதரவாக அமையும். இந்த நிகழ்ச்சித் திட்டமானது நான்கு மாவட்டங்களில் 24 செயற்பாடுகளினை உள்ளடக்குவதாக அமையும். அவற்றுள் தொழினுட்பவியலினால் வழிநடத்தப்படும் சுற்றுலா அபிவிருத்தி முறைமைகள், சுற்றுலாவிற்கு ஏற்ற வகையில் உள்ளடக்கத்தை வழங்கக்கூடிய திறன்கள் அபிவிருத்தி மற்றும் கிழக்கிற்கு நுழை வாயில் - செல்வாக்கு செலுத்தக்கூடியதொரு நிகழ்ச்சித்திட்டம் - "Supreme Chef- 2"

- பரிபூரணமான இனப்பெருக்க சுகாதார கற்கை
  இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கானது, TVET நிறுவகங்களில் இனப்பெருக்க சுகாதார கற்கை தொடர்பிலான பாடங்களினை முன்னெடுப்பதற்கு அறிவுறுத்துனர்களினை பயிற்றுவித்தலாகும். கற்பிப்பதற்கான கூறுகள் விருத்தி செய்யப்பட்டதோடு 50 அறிவுறுத்துனர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். இந்த வருடத்தில் 03 நிகழ்நிலை வகுப்புக்கள் நடாத்தப்பட்டன.

- கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட நடவடிக்கைகளுடன் 2020 ஆம் ஆண்டிற்கான உலக இளைஞர் திறன் தினம் கொண்டாடப்பட்டது.

- கௌரவ பிரதம மந்திரி அவர்களினால் "திறன் கடவுச்சீட்டு" எனப்படும் டிஜிட்டல் அட்டை அறிமுகப்படுத்தப்பட்டதோடு வேறுபட்ட துறைகளில் தெரிவு செய்யப்பட்ட திறன் வல்லுனர்கள் நிமித்தம் திறன் கடவுச்சீட்டுக்கள் 16 வழங்கப்பட்டன.

- You Lead கருத்திட்டத்தின் ஆதரவுடன் "இளைஞர்களினை விருத்தி செய்வதற்கு தொழில் வாய்ப்புக்கள், மனிதவள விருத்தி மற்றும் அழகியற் கலைதிறன்கள் என்பனவற்றினூடாக தொழிற்பயிற்சி, கொவிட்டின் தீவிர பரவலிற்கு பின்பு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் முதலாவதாக இருத்தல், நெகிழ்த்தன்மை கொண்ட இளைஞர்களுக்கான திறன்" எனும் தலைப்பில் **சர்வதேச கருத்துக்களம்** (webinars) முன்னெடுக்கப்பட்டது.

- தேசிய நிகழ்ச்சித் திட்டமானது 2020.07.15 ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றதுடன் இந்த நிகழ்ச்சித் திட்டமானது, **"YouTube live stream"** ஊடாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சித்

திட்டத்தில் ஒவ்வொரு பயிற்சி நிறுவகத்தையும் சேர்ந்த 10 மாணவர்களும் மற்றும் நிறுவனங்களினை சார்ந்த சகல அலுவலர்களும் பங்குபற்றினர். அமைச்சின் கேட்போர்கூடமானது, 190 பேர்களினை கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவுற 50% மானவர்களே இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றினர். ''வேறுபட்ட வகையில் உலகை காண்பதற்கு தொழினுட்ப ஆர்வலராக இருங்கள்'' நோய் பரவலின் காரணமாக ஏற்படுகின்ற பிரச்சினைகளினை கையாளுவதற்கு ஆக்கற்றிறன் மற்றும் புதிது கண்டுபிடிக்கும் திறனை ஊக்குவித்தல். ''விருந்தினருக்கான தங்குமனை விடுதி உபசார மனை சார்ந்த கைத்தொழிற்துறையில் சமையற்கலை நிபுணராகுதல் எவ்வாறு'', ''சவால்களை எதிர்கொள்ள உங்களுக்கு விருப்பமா?'', ''நீங்கள் சொந்தமாக ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்க இதுவே தருணம்'' ஆகிய தலைப்புக்களில் விரிவுரைகள் இடம்பெற்றன.

- TVET துறையுடன் தொடர்புடைய நிகழ்ச்சித் திட்டங்களாவன, தொலைக்காட்சிகளின் ஒரு சில அலைவரிசைகளில் ஒளிபரப்பு செய்யப்பட்டதோடு, இத்துறையில் றிபுணத்துவம் உடையவர்கள் இந்த நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றினர். இதன்போது ''உலக இளைஞர் திறன் தினம்'' திறன் கடவுச்சீட்டு, கொவிட் 19 தொற்று காலப்பகுதியில் தொழிற்துறையில் வழங்கப்பட்ட NVQ சான்றிதழ்களும், சவால்களும் மற்றும் பயிற்சியின் வகைகளும் ஆகிய தலைப்புக்களில் தொடர்புற்ற விடயங்கள் பற்றி இடம்பெற்றது.

- தொழிற்கல்வி முறையின் நடத்தை முறைகளினை மாற்றும் சோக்குடனும் அதுபோன்று தொழிற்கல்வி முறையினை இளைஞர்களிடையே பிரபல்யப்படுத்தல் நோக்குடனும் இவை தொடர்பிலான விபரங்களினை உள்ளடக்கி 20 கட்புல நாடாக்களை மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுடன் சமூக ஊடகங்களில் வெளியீடு செய்யப்பட்டது.

- தேசிய தொழில் வழிகாட்டுகை மற்றும் உசாவுகை நிலையம்

  2020 ஜனவரி மாதத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரையில் தேசிய தொழில் வழிகாட்டுகை மற்றும் உசாவுகை நிலையத்தினால் நிகழ்ச்சித் திட்டங்களாவன முன்னெடுக்கப்பட்டன.

தொடர் இல.	திகதி	இடம்	நிகழ்ச்சித்திட்டம்	பற்கு பற்றியவர்களின் எண்ணிக்கை
01	2020.01.30	பண்டாரநாயக்க வித்தியாலயம், வியாங்கொட	கல்வி ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்	800
02	2020.02.13	கல்வி அமைச்சு	சகல மாவட்டங்களிலும் தொழில் வழிகாட்டல் பணிப்பாளர்களின் தொழில் வழிகாட்டல் நடவடிக்கை எனும் விடயம் தொடர்பிலான முன்னேற்ற மீளாய்வு கூட்டம் பற்றிய விசேட உரை.	40
03	2020.07.06	கோதமி மகளிர் வித்தியாலயம்	2020 ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரண தர பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான கல்வி நிகழ்ச்சித் திட்டம்	500 மாணவர்கள் (இரு குழுக்களாக)

- தேசிய தொழில் வழிகாட்டுகை மற்றும் உசாவுகை நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள்

- தேசிய தொழில் வழிகாட்டுகை மற்றும் உசாவுகை நிலையத்தின் 011 2081808 எனப்படும் துரித அழைப்பு எண்ணின் மூலம் தொடர்பு கொண்ட 84 வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் 2019 ஆம் ஆண்டின் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு பின்பு க.பொ.த உயர்தர பரீட்சைக்குரிய பாடங்களினை தெரிவு செய்துக் கொள்வதற்காக நிலையத்திற்கு விஜயம் செய்தவர்களுக்கும் தொழில் வழிகாட்டுகை அறிவுறுத்தல்கள் மற்றும் தகவல்கள் வழங்கப்பட்டன.

- நாடளாவிய ரீதியிலுள்ள தொழில் தேடுவோர்களில் வழிகாட்டல்கள் தேவைப்படுவோருக்கு தொழில் வழிகாட்டுகையானது (பொது தொலைபேசி இலக்கம் மற்றும் நிகழ்நிலை தொலைபேசி இலக்கங்கள் என்பவற்றின் ஊடாக) வழங்கப்பட்டதோடு, பாடசாலை மாணவர்கள், ஆசிரியரகள், பெற்றோர்கள், இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அரசதுறை அலுவலர்கள், தனியார்துறை அலுவலர்கள், ஓய்வு பெற்ற அலுவலர்கள் மற்றும் அதி வணக்கத்துக்குரியவர்கள் ஆகியோர்களில், தேவையுடைய வகையில் தனிப்பட்ட ரீதியில் தொழில் வழிகாட்டல்கள் வழங்கப்படல்.

- திறன் அபிவிருத்தி உதவியாளர்களுக்கான வருடாந்த செயற்திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 22916 பாடசாலை மாணவர்களுக்காக 666 தொழில் வழிகாட்டுகை நிகழ்ச்சித் திட்டங்களினை நடத்தவும், கைத்தொழிற்துறையினை சார்ந்த 929 பயனாளிகளுக்கு 28 தொழில் கூட்டிணைவு நிகழ்ச்சித் திட்டங்களினை நடத்தவும் மற்றும் பிரதேச செயலக பிரிவினை சார்ந்த அரச அலுவலர்களுக்கு விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்தக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டதோடு, நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டதுடன் வளர்ச்சிப் படிக்கான நடவடிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டன.

2.1.2. எதிர்கால இலக்குகள்

- சுபீட்சத்திற்கான நோக்கு என்ற கொள்கை கூற்றிற்கு அமைவுற, பயிற்சி நிலையங்களினை மதிப்பீடு செய்து அறிக்கையினை பெற்றுக் கொள்ளல்.

- “One TVET” இனை அமுல்படுத்துகை செய்வதற்கான நடவடிக்கைகளினை எடுத்தல்.

- 2030 ஆம் ஆண்டு வரைக்கும் திறமுறை திட்டங்களினை தயாரித்தல்.

- NVQ மட்டம் 7 இலிருந்து 10 வரையிலும் அதிகரிப்பதற்கான செயன்முறைகளுக்கு ஆதரவு வழங்கல்.

- 2021.01.04 எனும் திகதியினையையும் 2209/14 எனும் இலக்கத்தினையும் கொண்டதுமான, அதிவிசேட வர்த்தமானிக்கு அமைவுற, திறன்கள் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சினால் விசேடமாக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய விடயங்கள் என தரப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு.

  – இந்த அமைச்சின் கீழடங்கும் தொழினுட்ப கல்லூரிகள், தொழினுட்வியல் கல்லூரிகள் மற்றும் நிறுவகங்கள் என்பனவற்றின் கட்டமைப்பினை ஆய்வு செய்வதனூடாக அவற்றின் நடப்பு பௌதீக வளங்களினை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்குதல். அத்துடன் சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு தேவைப்படக்கூடிய உற்பத்தி செயன்முறைகள் தொடர்பில் அவசியப்படக்கூடிய

திறன் விருத்தியினை விருத்தி செய்தல், தொழில் வாய்ப்புக்களினை பெற்றுக் கொள்வதன் பாதை வகுக்கும் முகமாக பட்டம் மட்டத்திலான சான்றிதழ்களை வழங்கக்கூடிய ‘‘நகர பல்கலைக்கழக கல்லூரிகள்’’ போன்ற உயர் கல்வி ஸ்தாபனங்களை விருத்தி செய்தல்.

– தொழிற்கல்வியினை ஒரு வெற்றிகரமான வியாபார முயற்சியாக்குவதற்குள்ள சாத்தியத் தன்மையினை வருமானத்திற்கான ஒரு மூலகம் மற்றும் நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் தொழிற்கல்வியினை கற்பதற்குள்ள வாய்ப்பு என்பனவற்றை எடுத்துக் கூறுவதற்கு ‘‘நடமாடும் தொழினுட்பவியல் கல்விச் சேவை’’ அறிமுகப்படுத்தப்பட்டதோடு ஆரம்பிக்கப்பட்டது.

- தொழிற்கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு 2021 ஆம் ஆண்டின் பாதீட்டு பிரேரணைகளினூடாக சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளினை அமுல்படுத்துகை செய்தல்.

- தற்போது ஆட்சேர்ப்பு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கையினை இரட்டிப்பாக்கல்.

  – குறைந்த கேள்வியுடைய கற்கை நெறிகளில் பயிலுனர்களினை ஊக்குவிக்கும் ‘‘நிபுணதா அபிஷேக’’ நிதி சலுகைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

  – செயலாற்றுகையினை அடிப்படையாகக் கொண்டு கல்விசார் பதவியணியினருக்கு படிகளினை வழங்குதலும் அவர்களின் செயல் திறமையினை விருத்தி செய்தலும்.

  – மாணவர்களின் உள்ளீர்ப்பை அதிகரிப்பதற்கு வெளியக / ஒப்பந்த அடிப்படையிலான பதவியணியினருக்கு வழங்கப்படும் படியினை அதிகரித்தல்.

  – தொழிற்கல்வி சார் பயிலுனர்களுக்கு பாதுகாப்பு சாதனங்களை வழங்குதல்.

  – ‘‘Tech Arana’’ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஓர துனீத்துவமான கட்டிடக்கலை அமைப்பில் 06 தொழினுட்பவியல் கல்லூரிகள் / மாவட்ட தொழிற்கல்வி பயிற்சி நிலையங்கள் என்பனவற்றை நிர்மாணித்தல் இதன் நோக்கு, இளைஞர்களின் அவதானத்தை ஈர்த்தல்.

  – மாணவர்களின் உள்ளெடுப்பை அதிகரிக்கும் முகமாக பயிற்சி நிலையங்களினை (வகுப்புக்கள், பயிற்சிப்பட்டறைகள், சிற்றுண்டி சாலைகள், ஓய்வறைகள், உடைமாற்றும் அறைகள், மலசலக்கூடங்கள் வசதிகள் மற்றும் மாணவரகள் ஆசிரியர்கள் விடுதிகள்) என்பனவற்றை புதுப்பித்தலுடன் பயிற்சிப்பட்டறைகள் மற்றும் ஆய்வுகூடங்களுக்கு தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்களினை வழங்குதல்.

  – பிராந்திய மட்டத்தில் புதிய நிலையங்களினை தாபித்தல்.

  – திறன் கல்வி பற்றி பலரறிய பிரபல்யப்படுத்தலும் அதன் தரத்தை உயர்த்தலும்.

- தொழிற் கல்வியினை பற்றிய ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டத்தை ஒரு மாதத்திற்கு இரு தடவைகள் அல்லது வருடம் பூராகவும் நடாத்துவதற்கு முன்மொழிதல்.
- அமைச்சிற்கும் மற்றும் மின்வலு சக்தி அமைச்சிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவுற ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பயிலுனர்களின் OJT பயிற்சியினது இரண்டாவது கட்டத்தினை 2021 ஜனவரி மாதம் நடாத்துவதற்கும் அவர்களுக்கு NVQ சான்றிதழ்களினை வழங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- SEPI கடன் நிதியீட்டு திட்டத்தினை விரிவுபடுத்தலும் அதற்கு தேவைப்படக்கூடிய நிதி ஒதுக்கீட்டின் அளவினை அதிகரித்தலும் விழிப்புணர்ச்சி நிகழச்சித் திட்டங்களினை நடாத்தல் மற்றும் நிகழச்சித் திட்டங்களினை கண்காணித்தலும் ஆதரவாக இருத்தலும்.
- தொழில் வாய்ப்புக்களுக்கான பாடத்திட்டங்களினை திருத்தியமைத்தல், ஆசிரியர்களினை பயிற்றுவித்தல் மற்றும் "YOULEAD" கருத்திட்டத்தினூடாக தொழில் முயலுமை விருத்தி போன்வற்றின் ஊடாக, திறன்மிகு இளைஞர்களின் தொழில் வாய்ப்பினை அதிகரித்தல்.
- கல்வி அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்படும் "தொழிற் கல்விக்கு மாணவர்களினை நெறிப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம்" எனப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டத்தின் நான்காவது கட்டமானது, நடைமுறைப்படுத்துகை செய்யப்படுவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளதோடு 2021 ஜனவரி மாதத்திலிருந்து அமைச்சின் தொழிற்பயிற்சி நிறுவகங்களில் மாணவர்களினை இணைத்துக் கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- இலங்கை சமுத்திரவியல் பல்கலைக்கழகத்திற்கு எதிர்காலத்தில் புதிய கட்டிடங்களில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- "உலக இளைஞர் திறன் தினம் 2021" இனை குறிக்குமுகமாக அமைச்சிற்கு கீழடங்கும், தொழினுட்ப கல்லூரிகள், தொழினுட்பவியல் கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்கள் என்பனவற்றை சார்ந்த மாணவர்களின் பங்களிப்புடன் நாடளாவிய ரீதியில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்தல் மற்றும் தேசிய மட்டத்தில் வைபவங்களிளை நடாத்தல்.
- திறன் போட்டிகள் மற்றும் புத்தாக்க கண்காட்சிகளினை நடாத்தல்.
- ஜேர்மன் அரசினது ரூபாய் 15.7 மில்லியன் நிதியுதவியுடன் மாத்தறையில் தேசிய தொழிற்கல்வி பயிற்சி நிலையத்தை தாபிக்க நடவடிக்கை எடுத்தல்.
- பொலனறுவையில் தேசிய தொழிற்கல்வி பயிற்சி நிலையத்தை தாபிக்க நடவடிக்கை எடுத்தல்.
- IETI – இற்காக ஓர் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு உத்தேசித்தல் - கட்டுபெத்த கருத்திட்டம்.
- திறன் அபிவிருத்தி உதவியாளர்கள் நிமித்தம் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்கம் செய்தல்.
- மாவட்ட செயற்பாட்டு செயற்குழுக்களினூடாக தொழினுட்ப கல்வி மற்றும் தொழினுட்பவியல் பயிற்சி என்பனவற்றை நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்கம் செய்தல்.
- தொழிற்பயிற்சியின் நடவடிக்கைகளினை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளினை எடுத்தல் மற்றும் அந்நடவடிக்கைகள் தொடர்பில் ஆதரவினை வழங்கலும் அப்பயிற்சிகளின் தரத்தை உயர்த்தலும்.
- பாடசாலை செயற்பாடுகளுடன் உருங்கிணைந்த வகையில் தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளினை முன்னெடுத்தல் மற்றும் இதனுடன் தொடர்புடைய ஆலோசனை நடவடிக்கைகளினை பிரபல்யப்படுத்த நடவடிக்கைகள் எடுத்தல்.

2.2. ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு

2.2.1. 2020 ஆம் ஆண்டின் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க ரீதியிலான அடைவுகள்

- சமூகத்தில் சகல மட்டங்களையும் சாந்தவர்களுக்கு விஞ்ஞான தொழினுட்ப அறிவினை வழங்கல் மற்றும் ஆராய்ச்சி நிறுவகங்கள் அத்துடன் பல்கலைக்கழகங்களின் விளைவு பொருட்களினை காட்சிப்படுத்துதல் போன்ற பிரதான இலக்குகளுடன் அமைச்சினால் ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட கண்காட்சியே இன்னோடெக் 2020 விஞ்ஞான தொழினுட்ப கண்காட்சி ஆகும். இதன் முதலாவது கண்காட்சியானது, தேசிய வியாபார முகாமைதுவ பாடசாலையுடனும் மற்றும் மகிந்த ராஜபக்ச

கல்லூரியுடனும் இணைந்து மார்ச் மாதம் 9 இலிருந்து 11 ஆம் திகதி வரையில் நடாத்தப்பட்டது.

2020 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபாய் 7.83 மில்லியன் என்பதுடன் செலவினம் ரூபாய் 7.82 மில்லியன் ஆகும்

- SLINTEC சார்ந்த விஞ்ஞானிகள் ஒன்றிணைந்து கோவிட் 19 பரிசோதனைகளுக்காக பயன்படுத்தப்படக்கூடிய பஞ்சுருட்டிகளை கணிசமான அளவில் அக அடிப்படையில் உற்பத்தி செய்தனர். கோவிட் 19 பரிசோதனைகளுக்காக பஞ்சுருட்டிகளை பாரிய அளவில் SLINTEC நிறுவனமானது உற்பத்தி செய்வதற்கு 2020 ஏப்ரல் மாத அளவில் தொடங்கப்படுவதற்கு உள்ளது.

- அக ரீதியில் அகழ்தெடுக்கப்பட்ட கிரைபிட்டுக்களினை கிரப்பின்னாக மாற்றக்கூடிய நவீன இயந்திரத்தின் உதவியுடன் கிரபின்னை அடிப்படையாக கொண்ட ஈய – அமில மின்கலங்கலினை உலகத்திலேயே முதன் முதலாக இலங்கையில் பாரிய அளவில் உற்பத்தி செய்தலானது தொடங்கப்படவுள்ளது என்ற அறிவிப்பானது சிலோன் கிரபின் டெக்னோலஜிஸ் (CGT) இனால் முன்வைக்கப்பட்டது.

- சுகாதார நலன் தொடர்பிலான சிக்கல்களுக்கு மிகச்சிறந்த தீர்வுகலினை வழங்கக்கூடிய இன்னுமோர் நிறுவனமான CirQ ஆய்வு கூடங்களுடன் இணைந்து 2020 ஜுன் மாதம் SLINTEC ஆனது குறைந்த செலவினத்திலான, மிக மெல்லிய, இலகுவில் பொருத்தக்குடிய சுவாச ரீதியில் சுலபமானதொரு உணரி ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

- SLINTEC ஆனது கருதுகோளினை ஆதாரபூர்வமாக நிரூபணம் செய்ததோடு அக ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட LAMP PCR கருவிக்கலத்தொகுதியின் முதல் நிலை கட்ட சரி பிழை பார்ப்பினை வெற்றிகரமாக செய்கை முறை விளக்கமளிப்பாக காட்டியது

- இலங்கையில் முதன் முதலாக பக்டீரியா எதிப்பினை உடைய காகித வகைகளாவன அட்லஸ் இனால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தகைய வகையிலான காகித வகைகளாவன SLINTEC இனால் கண்டுபிடிக்கப்பட்ட தொழினுட்பத்தினை பயன்படுத்தியே விருத்தி செய்யப்பட்டது. அறிமுகப்படுத்துகை நிகழ்வானது 2020 செப்டம்பர் மாதம் 18 ஆம் திகதி இடம்பெற்றது.

- COVID 19 இனை கண்டுபிடிப்பதற்கு மின்னணுவியலினை அடிப்படையாக கொண்ட உயிரி உணரிகளினை விருத்தி செய்வதற்கு ஒரு ஆராய்ச்சியினை முன்னெடுப்பதற்கு சிலோன் கிரப்பின் டெக்நொலோஜிஸ்ட்ஸ் (CGT) ஒரு உடன்படிக்கையானது SLINTEC இனால் 2020 நவம்பர் 30 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

- COVID 19 இனை கண்டுபிடிப்பதற்கு தேவைப்படக்கூடிய கருவிக்கலத்தொகுதிக்கு இருக்கின்ற உயர் கேள்வியின் காரணமாக இப்புத்தாக்கத்தை விருத்தி செய்யும் நிமித்தம் CGTL ஆனது SLINTEC உடன் பங்காளராக இணைந்துள்ளது.

- இலங்கை உயிர் தொழினுட்ப நிறுவகமானது (SLIBTEC) வர்த்தமானியில், தொழினுட்பவியல் அமைச்சின் கீழ் வரையறுக்கப்பட்ட இலங்கை உயிர் தொழினுட்ப (தனியார்) நிறுவகம் என தரப்பட்டுள்ளது. SLIBTEC தனியார் நிறுவகம் கூட்டிணைக்கப்பட்டு செயற்படுகின்றது. SLIBTEC சபை நியமனம் செய்யப்பட்டுள்ளது.

- இலங்கையில் சூழல் நட்புடன் கூடிய நெற்பயிற்செய்கைக்கு உயிர் சவ்வு உயிர் பசளை இனை பயன்படுத்துதல். இப் பசளைகளினனை நெற்பயிற்செய்கைக்கு பயன்படுத்துதல்

தொடர்பில், தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகமானது, தேசிய பசளைகள் செயலகத்துடனும் மற்றும் விவசாய அமைச்சின் விவசாய திணைக்களத்துடனும் இணைந்து அரசின் இலவச பசளை விநியோக திட்டத்தின் கீழ் செயற்படுகிறது.

- விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பத்தை பிரபல்யப்படுத்தல்

  - கோத் நிறுவகம் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள விதாதா வள நிலையங்களினைச் சார்ந்த விஞ்ஞான தொழினுட்ப அலுவலர்கள் ஆகியோருடன் கூட்டிணைந்து காலநிலை மாற்றம் மற்றும் சுற்றாடல் எனும் தொனிப்பொருளின் கீழ் 2020 ஆம் ஆண்டிற்கான விஞ்ஞான படவிழா ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் 21 படவிழாக்கள் இடம்பெற்றது. இந்நிகழ்வில் 25667 பாடாசலை மாணவர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.
  - பாடசாலை மட்டத்திலான விஞ்ஞான, தொழினுட்ப, எந்திரவியல் மற்றும் எண்கணித கழகங்களினையும் மற்றும் அதனோடிணைந்த நடவடிக்கைகளினையும் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்துவதற்கு 283 பாடசாலை மாணவர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் ஒரு பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டது.

  - பாடசாலை மாணவர்களுக்கு "கேள்விகளினை அடிப்படையாகக் கொண்ட கற்கை முறையின் ஊடாக STEM கற்கையினை கற்பதற்கு எளிதாக்குதல்" எனும் பொருள் தொடர்பில் இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்துடன் இணைந்து பல பயிற்சிப் பட்டறைகளை முன்னெடுத்தல். "கேள்விகளினை அடிப்படையாகக் கொண்ட கற்கை முறையின் ஊடாக STEM கற்கையினை கற்றல் முறையினை உட்புகுத்தல்" எனும் பொருள் தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டத்தினை கல்வி அமைச்சினை சார்ந்த உயரதிகாரிகள், ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள் மற்றும் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளுக்கு நடாத்தல்.

- தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சட்டகத்தினை (NRDF) நடைமுறைப்படுத்துகை செய்தல் / இலங்கையின் அபிவிருத்தி இலக்குகளுக்கும் மற்றும் தேசிய குறிக்கோள்களுக்கும் இணைந்த வகையிலான நிகழ்ச்சித் திட்டங்கள்

  - சிரில் பொன்னம்பெரும ஞாபகார்த்த சர்வதேச மாநாடானது, ஆராய்ச்சி அபிவிருத்தி சட்டகத்தில் இனம் கண்டுக் கொள்ளப்பட்ட விடயங்களினை அமுல்படுத்துகை செய்வதற்கு உதவியாக இருக்கும் வகையில் தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகத்துடன் இணைந்து ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட ஒன்றாகும்.

  - ஆராய்ச்சிகளினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கும் கீழ்குறிப்பீடு செய்யப்பட்ட விடயங்கள் தொடர்பில் தொழினுட்பங்களினை பகிர்வதற்கும் மற்றும் கீழ்குறிப்பீடு செய்யப்பட்டவாறு தொழினுட்பவியல் அறிமுகப்படுத்துகை செய்யப்படுவதற்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

- ஆராய்ச்சிக்கு ஆதரவு வழங்குதல்.

  ஆராய்ச்சி படிகளினை வழங்குதல் பொருட்டு 20 ஆராய்ச்சி பிரேரணைகளாவன மதிப்பீடு செய்யப்பட்டன. மேலும் கொவிட் - 19 இனை தடுத்தலுடன் தொடர்புற்ற வகையில் 44 ஆராய்ச்சி பிரேரணைகள் தேசிய ஆராய்ச்சி மன்றம் மற்றும் தேசிய விஞ்ஞான மன்றம் என்பனவற்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன என்பதுடன் அவை வெற்றிகரமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

- இந்தோ ஸ்ரீலங்கா இணை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம்

  இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமைச்சானது, மேலும் ஒரு கூட்டுறவு நிகழ்ச்சித்திட்டத்தை, இந்தியாவினைச் சார்ந்த விஞ்ஞான மற்றும் தொழினுட்ப திணைக்களத்துடன் ஆரம்பித்தது என்பதுடன் இதற்கு அமைவுற இரு நாடுகளினையும் சார்ந்த விஞ்ஞானிகள் கூட்டிணைந்து ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளினை முன்னெடுப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

  இதற்கமைவுற, முதல் சுற்றில் 8 ஆராய்ச்சி கருத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டதோடு அவை 2012 இல் ஆரம்பிக்கப்பட்டவை ஆகும். இரண்டாவது சுற்றில் தெரிவு செய்யப்பட்ட 17 ஆராய்ச்சி கருத்திட்டங்களுக்கு நிதியீடு செய்யப்பட்டிருப்பதுடன் அவை 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு நடப்பில் முன்னெடுக்கப்படுபவை ஆகும். கூறப்பட்ட இந்த ஆராய்ச்சி கருத்திட்டங்களின் கீழ் 86 விஞ்ஞான பிரசுரிப்புக்கள் வெளியிடப்பட்டன.

  இது தொடர்பிலான மூன்றாவது சுற்றினை, 2019 ஆம் ஆண்டில் தொடங்குவதற்கு இரு நாடுகளும் இணைந்து முன்மொழிவுகளுக்கான அழைப்பினை 2019 ஆம் ஆண்டில் விடுத்தது. இதற்கமைவுற, கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் ஆராய்ச்சி பிரேரணைகள் என்பன இலங்கை மற்றும் இந்தியத் தரப்பினர்களால் மின்னஞ்சலினூடாக சோதிக்கப்பட்டது. கிடைக்கப்பட்டவைகளில் 178 ஆராய்ச்சி பிரேரணைகளும் மற்றும் பயிற்சி பட்டறைகள் தொடர்பில் 14 பிரேரணைகளும் முன்னெடுக்கப்படுவதற்கு இரு தரப்பினர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆராய்ச்சி பிரேரணைகளும் மற்றும் பயிற்சி பட்டறைகள் தொடர்பிலான பிரேணைகளும் மதிப்பீடு செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதுடன் மதிப்பீடுகளின் முடிவில் தெரிவு செய்யப்பட்ட ஆராய்ச்சி பிரேரணைகளுக்கு நிதியீடு வழங்கப்படும். கரு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பாண்மையில் (CERN) உயர் சக்தி பௌதிகவியலில் பிஎச்டி பட்டத்தை பெறுவதற்கான பட்டப்பின்படிப்பு கற்கை

  இலங்கை சார் இளம் விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு உயர் சக்தி பௌதிகவியல் எனும் பரப்பெல்லையில் பிஎச்டி பட்டத்தை வழங்குவதற்கான ஒரு இணையுரிமை நிகழ்ச்சித்திட்டத்தை கரு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பாண்மை (CERN) ஆரம்பித்துள்ளது.

  கரு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பாண்மையில் (CERN) பிஎச்டி பட்டத்தை பெறுவதற்கான கற்கையினை தொடரும் இளம் விஞ்ஞானிகளினால் 19 ஆராய்ச்சி ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட்டன. மேலும் விஞ்ஞான சஞ்சிகையில் பிரசுரிக்கப்படுவதற்கு மேலதிகமாக 23 ஆக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

  Dr. எஸ்.ஆர்.டி. ரோசா அவர்களினால் துணிக்கை பௌதிகவியல் எனும் பொருள் தொடர்பில் இரு அத்தியாயங்களினை கொண்டதும் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டதுமான ஒரு கானொளி நாடாவானது க.பொ.த. உயர்தர மாணவர்களுக்காக வழங்கப்பட்டது.

  அடிப்படை துணிக்கைகள் மற்றும் கதிரியல் எனும் விடயம் தொடர்பில் ஒரு புத்தகமானது ருகுணு பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பௌதிகவியலாளரினால் வெளியிடப்பட்டதுடன் இப்புத்தகத்தில் கரு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பாண்மையில் (CERN) உயர் சக்தி பௌதிகவியலில் பிஎச்டி பட்டத்தை பெறுவதற்கான கற்கையினை தொடரும் இளம் விஞ்ஞர்னிகளினதும் மற்றும் ஆராய்ச்சியாளர்களினதும் அறிவு சார் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- கிறிஸ்டய்ல் அஸ்பெஸ்டஸ்ஸை இலங்கையில் பயன்படுத்துவதற்கான பணிக்குழு

  ரஷ்ய நாட்டின் ஊரல் வர்த்தக சபைக்கும் அமைச்சிற்கும் இடையிலான கூட்டிணைவின் விளைவாக ஒரு பணிக்குழு நியமனம் செய்யப்பட்டதோடு, இப்பணிக்குழுவானது ரஷ்ய மற்றும் இலங்கை பிரதிநிதிகளினை உள்ளடக்கியதாக இருந்தது. பணிக்குழுவின் கோரிக்கைக்கு அமைவுற, இலங்கையில் கைத்தொழிற்துறை, நிர்மாணக்களம் மற்றும் பாவனையாளர்கள் ஆகியோரிடத்தில் அஸ்பெஸ்டஸ் தகடுகளின் சாதக மற்றும் பாதக தாக்கங்கள் தொடர்பில் 4 ஆராய்ச்சி குழுக்கள் பணியாற்றுகின்றது.

ஆராய்ச்சியின் பெறுபேறுகளாவன மீள் பரிசீலனை செய்யப்பட்டு எதிர்காலத்தில் தேசிய ரீதியில் எடுக்கப்படும் தீர்மாணங்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உத்தேசம் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சி கருத்திட்டமானது, ரஷ்ய சம்மேளனத்தினால் இணை – நிதியீடு செய்யப்பட்டதாகும். ஆராய்ச்சி கருத்திட்டத்தின் இரண்டாவது தவணைப் பணமானது, ரஷ்ய சம்மேளனத்தினால் வழங்கப்படுதல் வேண்டும். இலங்கையில் அஸ்பெஸ்டஸ் தகடுகளினை பாதுகாப்பான முறையில் பயன்படுத்தல் பற்றிய பணிக்குழுவினது 7 ஆவது கூட்டமானது, இலங்கையிலுள்ள கண்டி மற்றும் கொழும்பில் 2020 ஜனவரி மாதம் 13 – 15 ஆம் திகதி வரையில் இடம்பெற்றதுடன் இதன்போது இது தொடர்பிலான ஆராய்ச்சியினது வளர்ச்சிக் கட்டங்ளாவன, கலந்துரையாடலின் ஓர் அம்சமாக கலந்துரையாடப்பட்டது.

கூறப்பட்ட தவணைப் பணங்களாவன, தேசிய ஆராய்ச்சி மன்றத்தில் ஆராய்ச்சிகளில் இணைந்துள்ள ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் கூறப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 03 ஆராய்ச்சி வெளியீடுகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன.

- COMSAT உசாவுகை குழுக்கூட்டம்

  தெற்கில் நிலைபேறான அபிவிருத்திக்கு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் எனும் விடயம் தொடர்பிலான ஆணைக்குழுவின் நான்காவது உசாவுகை கூட்டமானது, 2020 நவம்பர் மாதம் 11 ஆந் திகதி இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின் போது, ஆராய்ச்சிகள் மற்றும் ஆய்வுகளில் தொடர்ர்தும் கூட்டிணைவதற்கு கைத்தொழில் தொழினுட்ப நிறுவகத்தின் இயலுமை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

- BIMSTEC தாபிப்பு - தொழினுட்ப மாற்றீடு வசதிகள்

  நுண், இடைநிலை மற்றும் நடுத்தர மட்டத்து தொழில் முயற்சியாளர்களுக்கு பயன்படக்கூடிய தொழினுட்பங்களாவன பயனுறுதி மிக்க முறையில் மாற்றீடு செய்யப்படுவதற்காக BIMSTEC தொழினுட்ப மாற்றீட்டு நிலையத்தை தாபிப்பதற்கு உத்தேசம் கொள்ளப்பட்டதோடு அது தொடர்பில் BIMSTEC உறுப்புரிமை நாடுகள் 7 இனதும் அனுமதியுடன் அமைப்பு அக விதிகள் கைச்சாத்திடப்பட்டதோடு இந்த BIMSTEC தொழினுட்ப மாற்றீட்டு நிலையத்தை கொழும்பில் தாபிப்பதற்கான முதல் நிலை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- இயந்திர மின்னணுவியலினை அடிப்படையாக கொண்ட பொருளாதார அபிவிருத்தி முயற்சிகள் (MEDI)

  கருத்திட்டமானது, இரண்டு பிரதான பகுதிகளினை கொண்டதாக அமைகின்றது. (அ) நீண்ட தவணைகளினை கொண்ட கடன் வசதிகளினை தாபித்தல் (LTLF), (ஆ) கட்டளைகளில் பயிற்சி, மூலவகை மாதிரிபடுத்துகை மற்றும் சோதனை வசதிகள் (SPTF).

  SPTF ஆக்கக்கூறினை அமுலாக்கம் செய்கையில் அது தொடர்பிலான பொறுப்புகளான, தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்திற்கு ஒரு முன்னோடி கருத்திட்டம் என்ற வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டதோடு அவை தொடர்பிலான செயற்பாடுகள், நிலையத்தின் பதவியிணருடன் இணைந்து முன்னெடுக்கப்படுகின்றன. இவ் விடயம் தொடர்பில் சிற்சில கருவிகள் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்பதுடன், அவை ஹோமாகம பிட்டிபனையிலுள்ள நனோ தொழினுட்ப மற்றும் விஞ்ஞான பூங்காவிலுள்ள தொழினுட்ப அடைக்காப்பக நிலையத்தில் அமைந்துள்ள SPTF இல் நிறுவப்பட்டுள்ளது. உற்பத்தி வடிவமைப்பு கம்பனிகளுக்கு தேவையான கருவிகள் ஏற்கனவே சேகரிக்கப்பட்டதோடு நிறுவகமானது ஏற்றுமதி சந்தையினை இலக்காக கொண்டு சர்வதேச தரங்களுக்கு அமைவாக உற்பத்தி பொருட்களினை சொந்தமாக வடிவமைக்க நோக்கம் கொண்டுள்ளது.

- பசளைகளினை விருத்தி செய்தல் மற்றும் மண் முகாமைத்துவம் என்பனவற்றினூடாக தரமிழந்த மண்ணின் தரத்தை மேம்படுத்தல்

  BFBF இனை பயனுள்ள முறையில் பயன்படுத்துதல் பற்றிய பரீட்சார்த்த சோதனைகள் 25 அம்பாறை, குருணாகல், பொலநறுவை, கேகாலை மற்றும் அனுராதபுரம் ஆகிய 5 மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டது. அதுபோன்று மஹா போகத்தில் நெற்பயிர்ச் செய்கையானது புதிதாக தொடங்கப்படும் அல்லது விஸ்தரிக்கப்படும் நிலப்பரப்புக்களில் BFBF பாவனையின் பயனுறுதியின் நிலையினை அறிந்துக் கொள்ளும் பொருட்டு இப்பசளையானது அம்பாறை, மொணராகலை, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, பொலன்னறுவை, காலி மற்றும் குருநாகலை ஆகிய மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டது.

- நெல் மற்றும் சிறு பயிர்களில் உலகளாவிய அளவுக்கோலிற்கு அமைவுற விளைச்சலினை உருவாக்குதல்.

  இலங்கையில் நெல் விளைச்சலின் அளவு குறைவாக இருப்பதற்கான அடிப்படை காரணத்தினை உடலியல் மற்றும் உயிர் இரசாயனவியல் தொழினுட்பங்களுடன் மரபியல் வரைப்படங்கள் மற்றும் உயிர்மக்குறிப்பு பகுப்பாய்வு என்பனவற்றினை பயன்படுத்தி அறிதலே இக்கருத்திட்டத்தின் நோக்காகும். இக்கருத்திட்டமானது தற்போது, இலங்கையின் அரிசி வகைகளினது மரபு வழி அமைப்பு மற்றும் தோற்றவழி சார் அமைப்பு தொடர்பிலான ஆய்வுப் பணிகளினை ஆராய ஆரம்பித்துள்ளது. சூரிய பலகங்களின் மூலவகை மாதிரி உற்பத்தி பற்றிய கருத்திட்டம்

  அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற சூரிய பலகங்களின் மூலவகை மாதிரி உற்பத்தி பற்றிய கருத்திட்டமானது, களனிய பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களினால் நடைமுறைப்படுத்துகை செய்யப்படுகின்றது. இக் கருத்திட்டத்துடன் தொடர்புடைய ஆராய்ச்சி அபிவிருத்தி விடயங்களுக்கு தேவைபடக்கூடிய தொழினுட்பவியல் ஆதரவானது தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகத்தினால் வழங்கப்படுகின்றது.

  கம்பஹா மற்றும் கம்பளையினை சார்ந்த 03 பாடசாலைகளினை சேர்ந்த 177 மாணவர்களுக்கு மூன்று விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

  3 மற்றும் 4 NVQ மட்டத்தினை கொண்ட சூரிய தொழினுட்பவியலாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது இந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது. இதனை கற்பதற்கு நாடெங்கிலுமுள்ள ஒன்பது தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் 2019 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் கிட்டத்தட்ட 130 அபேட்சகர்கள் தம்மை பதிவு செய்துள்ளனர்.

  இலங்கையின் நிலைபேறான சக்தி அதிகாரசபை, தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை அத்துடன் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு ஆகியவற்றின் கூட்டிணைவுடன் முன்னெடுக்கப்படும் ஒரு கற்கை நெறியான NVQ வினால் அங்கீகரிக்கப்பட்ட முன் கற்கை முறைமைகளில் (RPL) 3000 அபேட்சகர்களினை பயிற்றுவிப்பதற்கு ஒரு நிகழ்ச்சித்திட்டமானது கருத்திட்டத்தினால் தொடங்கப்பட்டதோடு இந்த நிகழ்ச்சித் திட்டமானது நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யக்கூடியதொன்றாகும்.

  மெல்லிய சவ்வு அமைப்பிலான சூரிய கலங்களினை வைப்பு செய்வதற்கு தேவைப்படும் பிரதான கருவியான Closed Space Sublimatuin (CSS) முறைமை நிறுவப்பட்டதோடு அது முறைசார்ந்த முறையில் பேராதனை பல்கலைக்கழகத்தின் பௌதிகவியல் விஞ்ஞான திணைக்களத்திடம் இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் கையளிக்கப்பட்டது.

- விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் புத்தாக்கத்திற்கான கூட்டிணைப்பு செயலகத்தினால் எடுக்கப்பட்ட அபிவிருத்தி முயற்சிகள் (COSTI)

  – COSTI மற்றும் ஜப்பான் நாட்டின் காப்புரிமை அலுவலகம் என்பனவற்றுடன் கூட்டிணைந்து WIPO வானது தேசிய காப்புரிமை வரைவு நிகழ்ச்சித் திட்டத்தைத் ஒழுங்கு செய்ததோடு இந்த நிகழ்ச்சித் திட்டமானது 2020 ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதியிலிருந்து செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி வரையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் 15 நிறுவகங்களினை சார்ந்த 47 பேர் பங்கு பற்றினர். நியூசிலாந்து, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்க அரசு மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளினை சார்ந்த 4 உலக அதி புலமை சொத்து அமைப்பாண்மையினை சார்ந்த நிபுணர்கள் பங்கு பற்றுனர்களினை பயிற்றுவித்தனர்.

  – கல்வித் திட்டங்களினை சான்றுபடுத்துகை செய்வதற்கான நிகழ்நிலை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமானது, தேசிய உயிர் தொழினுட்ப கைத்தொழில் சங்கம் (NBIA) ,ஐக்கிய தேசிய கைத்தொழில்அபிவிருத்தி அமைப்பாண்மை (UNIDO) மற்றும் COSTI என்பனவற்றோடு இணைந்து முன்னெடுக்கப்பட்டதோடு இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2020 நவம்பர் மாதம் 2 ஆம் திகதியிலிருந்து 9 ஆம் திகதி வரையில் இடம் பெற்றது. பல்கலைக்கழகங்கள், UNIDO மற்றும் NBIA என்பனவற்றை கூட்டிணைத்தல் பணியானது COSTI யினால் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் ஐந்து பல்கலைக்கழகங்களினை சார்ந்த 25 பேர் பங்கு பற்றினர்.

  – புத்தாக்க சூழலினை இயலச் செய்யும் கருத்திட்டம் (EIE) என்பதன் கீழ் காப்புரிமை தேடல் பயிற்சி பட்டறை ஒன்று இலங்கையில் 2020 பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதியிலிருந்து 20 ஆம் திகதி வரையில் இடம் பெற்றது. உலக அதி புலமை சொத்து அமைப்பாண்மை (WIPO), இலங்கை தேசிய அதி புலமை சொத்து அலுவலகம் (NIPO) மற்றும் COSTI என்பன இணைந்து இந்த EIE கருத்திட்டத்தினை நடைமுறைபடுத்துகை செய்கின்றன.

- இலங்கை கோள்மண்டலம்

  விஞ்ஞான பிரபல்யபடுத்துகை நிகழ்ச்சித்திட்டம்

  பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களிடையே விஞ்ஞான பிரபல்யபடுத்துகை செய்வதற்கு கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

பிரபல்யபடுத்துகை முறை	**நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை**	**பயனாளிகளின் எண்ணிக்கை**
கோள்மண்டல காட்சிகளின் எண்ணிக்கை	98	22,653
வெளிவாரி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	6	1,755
நடைமுறைபடுத்தபட்ட யுளவசழ முனைள மற்றும் Astro தகவல் தொழினுட்ப வகுப்புகளின் எண்ணிக்கையும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும்	188	188
விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள்	5	6,800
கண்காட்சி	3	6,300

- இலங்கை நனோ தொழினுட்ப நிறுவகம் (SLINTEC)

  - Mag Genome DNA பிரித்தெடுப்பு கருவிக்கலதொகுதியின் அறிமுகப்படுத்துகை நிகழ்வானது, இலங்கை கொள்கைகள் கற்கை நிறுவகத்தில் 2020 ஜனவரி மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்றது. நனோ தொழினுட்பத்தினை அடிப்படையாக கொண்ட DNA பிரித்தெடுப்பு கருவிக்கல தொகுதியானது வரை. Mag Genome தொழினுட்ப தனியார் நிறுவத்துடன் கூடிணைந்து SLINTEC இனால் விருத்தி செய்யப்பட்டுள்ளது.

  - 2020 ஆம் ஆண்டு மே மாதம் SLINTEC ஆனது வைரஸிற்கு எதிராக ஒரு பூச்சினை கண்டுப்பித்தது. இந்த பூச்சானது மேற்பரப்புக்கள் மற்றும் சூழவுள்ள காற்றில் உள்ள வைரஸ் மற்றும் ஏனைய நோய் நுண்மங்களினை அழிக்கவல்லது. இந்த புதுக்கண்டுபிடிப்பானது SLINTEC இனால் பல அக ரீதியிலான அலுவலகங்களில் பயன்படுத்தப்பட்டதோடு முடக்கல் நிலைக்கு பின்பு பணியாற்றுவதற்கு பல கம்பனிகளுக்கு உதவியாகவும் இருந்தது.

  - முகக்கவசம் அணிவதால் ஏற்படக்கூடிய சுவாச ரீதியிலான சிக்கல்களினை கண்டுபிடித்து தவிர்க்கும் நிமித்தம் தமது முகக்கவசத்தில் ஏற்புடைய வகையில் ஒரு உணரியினை பொருத்துதல் எனும் விடயம் தொடர்பில் ஹைட்ராமனியுடன் ஒரு உடன்படிக்கையில் SLINTEC தன்னை உள் நுழைத்துள்ளது. ஹைட்ராமனியினால் ஏற்றுமதி செய்யப்படும் முகக்கவசத்திலும் இந்த தொழினுட்பத்தினை இணைத்து அதன் பெறுமதியினை அதிகரிப்பதற்கு எதிபார்க்கப்பட்டுள்ளது.

  - பெல்ஜியத்தில் ப்ரூசல் எனுமிடத்திலுள்ள நனோ தொழினுட்ப கைத்தொழில் கழகத்தில் (NIA) SLINTEC ஓர் உறுப்பினராகியுள்ளது. கைத்தொழில் துறையில் நனோ தொழினுட்பங்களுடன் தொடர்புற்ற விடயங்களில் சுயாதீனமாகவும் பொறுப்புடனும் செயற்படும் ஒரு நிறுவகமே NIA ஆகும். நடைமுறையில் கண்டுபிடிக்கப்படும் புத்தாக்கங்களுக்கு NIA தனது ஆதரவினை வழங்குவதுடன் மிகு உயர் தரம் மிக்க தொழினுட்பங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கும் அவை பாதுகாப்பான முறையில் பாவனை செய்யப்படுவதற்கும் தனது ஆதரவினை வழங்குகிறது.

2.2.2. 2021 ஆம் ஆண்டிற்கான இலக்குகள்

- "சௌபாக்கியமான எதிர்காலத்தை நோக்கி " எனப்படும் தேசிய கொள்கை சட்டகத்திற்கும் மற்றும் நிலையான அபிவிருத்தி கொள்கைக்கும் ஒருங்கிணைந்த வகையில் ஆராய்ச்சி அபிவிருத்திக்கு ஆதரவு வழங்கல்
- உலகளாவிய புத்தாக்க சுட்டி (GII) மற்றும் உலகளாவிய போட்டிக்குரிய சுட்டி (GCI) என்பனவற்றில் உயர் நிலையினை சாதித்தல்

- அதி நவீன தொழில்நுட்ப திறன், தொழில்நுட்ப புத்தாக்க சூழல் முறைமை மற்றும் ஆராய்ச்சி நிறுவகங்கள் என்பனவற்றின் தரத்தை மேம்படுத்தல்
- ஆராய்ச்சி நிறுவகங்கள் மற்றும் ஆராய்ச்சி கூட்டினை கருத்திட்டங்கள் என்பனவற்றின் எண்ணிக்கையினை அதிகரித்தல்

2.2.3. விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க துறையினால் முகம் கொடுக்கப்படும் சவால்கள்

- விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க துறைக்கு அரசினால் வழங்கப்படும் நிதியத்தில் பற்றாக்குறை
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் தனியார் துறையின் முதலீட்டில் பற்றாக்குறை
- காப்புரிமை செயற்பாட்டில் வினைத்திறனின்மை – செயன்முறையானது பயனுறுதி மிக்கதாய் ஆக்குதல் வேண்டும்
- ஆராய்ச்சியினை வர்த்தகயமயப்படுத்துகை தொடர்பிலான சிக்கல்கள்
- அரசினது சம்பள அளவுத் திட்டம் குறைவானதாக இருப்பதனால் தொழில் பன்பட்டவர்களினை ஆராய்ச்சி நிறுவகங்களில் தக்க வைப்பதில் உள்ள சிரமம்
- விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் போன்ற மூளைசாலிகளின் வெளியேற்றம்
- கைத்தொழில்துறை – பல்கலைக்கழகங்கள் - ஆராய்ச்சி நிறுவகங்கள் என்பனவற்றிக்கிடையே காணப்படும் தொடர்புகளுக்கிடையே நலிவு நிலை
- பட்டதாரிகள் தொழில் தேடுனராக இல்லாது வழங்குனராக இருத்தல் - வியாபார கலங்கள், புது வியாபாரங்களினை தொடங்குதல், சிறிய அளவில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கைத்தொழில் முயற்சிகள்
- மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு கூட்டிணைவுகள் - வெளிநாடுகளுடன் தொடர்புகளினை தொடங்குவதற்குள்ள மிக நீண்ட நடைமுறைகள்
- பல்கலைக்கழகங்கள், மற்றும் ஆராய்ச்சி நிறுவகங்களில் காணப்படும் வினைத்திறனற்ற ஆராய்ச்சி கல்ாச்சாரம்
- உலகளாவிய ரீதியில் போட்டியிடும் அளவிற்கு தகைமை உள்ள ஆராய்ச்சி பெறுபேறுகள் பெறப்படாமை
- அநேகமான அமைப்புக்கள் ஒரே ஆராய்ச்சியினை மீண்டும் மீண்டும் செய்தல்

பிரதான கணக்கியல் அலுவலர்
பெயர்
பதவி
திகதி 29/04/2021

Professor K. Kapila C.K. Perera
Secretary
Ministry of Education
"Isurupaya"
Pelawatte,
Battaramulla.

அத்தியாயம் 03

வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதி செயலாற்றுகை பற்றிய கூற்று

ஏசிஜ-எப்

ஒட்டு மொத்த நிதி செயலாற்றுகை
2020 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்திற்காகது

ரூ.

பாதீடு 2020		குறிப்பு	உண்மை நிலை 2020	2019	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	
	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள்				
-	மீதான வரி	2	-	-	ஏசிஜ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானம் அல்லாத பெறுகைகள்		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		3,036,934,739	3,800,334,000	ஏசிஜ-3
-	வைப்புகள்		68,298,457	76,288,364	ஏசிஜ-4
-	முற்பணக் கணக்குகள்		62,122,440	41,103,568	ஏசிஜ-5
-	ஏனைய பெறுகைகள்		45,760,818	51,375,842	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		3,213,116,455	3,969,101,773	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		3,213,116,455	3,969,101,773	
	fop : nrytpdk;				
-	மீண்டுவரும் செலவினம்		-	-	
548,500,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய வழியர் அனுகூலங்கள்	5	510,418,222	946,146,666	
184,590,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	172,685,557	293,839,670	ஏசிஜ-2(ii)
5,469,815,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	5,273,552,280	5,219,360,552	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	12,000	
6,202,905,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)		5,956,656,060	6,459,358,888	
	மூலதனம் செலவினம்				
110,758,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	107,666,400	169,021,497	
1,999,259,000	முலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	1,855,656,014	2,519,248,841	
759,450,000	முலதன மாற்றல்கள்	12	638,345,120	1,132,348,223	ஏசிஜ-2(ii)
87,000,000	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	86,248,460	24,894,028	
172,298,000	மனித வள அபிவிருத்தி	14	155,931,280	79,970,913	
1,530,690,000	ஏனைய முலதனச் செலவினங்கள்	15	1,235,101,309	1,405,899,088	
4,659,455,000	மொத்த மூலதனம் செலவினம் (உ)		4,078,948,582	5,331,382,589	
	பிரதான மேரேட்டுச் செலவினம் (ஊ)		33,161,746	44,207,702	
	வைப்புக் கொடுப்பனவுகள்		20,786,074	12,134,070	ஏசிஜ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		12,375,672	32,073,632	ஏசிஜ-5
	மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)		10,068,766,388	11,834,949,178	
10,862,360,000	2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி ஏ = (இ - எ)		(6,855,649,933)	(7,865,847,405)	

3.2 நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ-பீ

2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2020 ரூபா	2019 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	5,544,420,133	4,448,502,282
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	72,597,303	122,344,071
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	1,080,858
மொத்த சொத்துக்கள்		5,617,017,436	4,571,927,211
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
தேறிய பெறுமதி		(86,300,628)	11,138,523
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		5,544,420,133	4,448,502,282
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	-	
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	158,897,931	111,205,548
பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	1,080,858
மொத்தப் பொறுப்புக்கள்		5,617,017,436	4,571,927,211

பக்க இலக்கம் 06 முதல் 117 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 118 முதல் 135 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 2021.02.25

Professor K. Kapila C.K. Perera
Secretary
Ministry of Education
"Isurupaya"
Pelawatte,
Battaramulla.

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 2021.02.25

P.W. Ratnaksa
Development,
n & Innovation
ligala Mawatha,
05.

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர் :
திகதி : 2021.02.25

K. V. S. DE SILVA
Chief Finance Officer
State Ministry of Skills Development,
Vocational Education, Research & Innovation
"Nipunatha Piyasa", 354/2, Elvitigala Mawatha,
Narahenpita, Colombo 05.

2

3.3 காசோட்டக் கூற்று



ஏசிஎ-சீ

காசோட்டக் கூற்று
2020 டிசம்பர் 31ல் உள்ளவாறாக

	உண்மை நிலை	
	2020 ரூ.	2019 ரூ.
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டவைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	14,169,723	41,840,453
ஏனைய தினைக்களங்களின்/அமைச்சுக்களின் மூலம் திரட்டப்படுகின்ற வருமானம்	-	-
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	3,036,934,739	3,799,242,451
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	3,051,104,462	3,841,082,903
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள்	635,510,925	1,183,064,884
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	26,251,260	11,878,758
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	81,250,369	193,379,897
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	51,601,212	-
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	794,613,766	1,388,323,539
தொழிற்பாட்டு செயற்பாடுகளின் தேறிய காசுப்பாய்ச்சல் (இ) =(அ)-(ஆ)	2,256,490,697	2,452,759,364
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
பௌதீக சொத்துக்களின் சொத்துக்களின் விற்பனை	-	118,640
வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முற்பணங்களிலிருந்து அறவிடப்பட்டவை	19,170,869	36,498,568
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	19,170,869	36,617,208
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்துக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	2,314,894,064	2,525,895,214
முற்பணக் கொடுப்பனவுகள்	8,279,885	27,635,653
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	2,323,173,950	2,553,530,867
முதலீட்டுச் செயற்பாடுகளின் தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ) =(ஈ)-(உ)	(2,304,003,080)	(2,516,913,658)
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ-ஊ)	(47,512,384)	(64,154,294)
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
கிடைக்கப்பெற்ற வைப்புகள்	68,298,432	76,288,364
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	68,298,432	76,288,364
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வைப்புகளின் கொடுப்பவை	20,786,049	12,134,070
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	20,786,049	12,134,070
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ) =(ஏ)-(ஐ)	47,512,383	64,154,294
காசில் ஏற்பட்ட தேறிய அளவு (ஓ)=(எ) -(ஒ)	(0)	(0)
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3.4 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

தயாரிப்பின் அடிப்படை

1. அறிக்கை செய்யப்படும் காலப்பகுதி

இந்த நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியானது 2020 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் ஆகும்.

2. அளவீட்டின் அடிப்படை

நிதிக்கூற்றுக்களாவன வரலற்றுக்கிரயத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் சில சொத்துக்களினை மீள் மதிப்பீடு செய்வதன் ஊடாக அத்தொகை திருத்தப்பட்டதோடு வேறு வகையில் குறிப்பிடப்படாது விட்டால் அவை திருத்தப்பட்ட மதிப்பீட்டின் பெறுமானத்தில் பதியப்படும்.

நிதிகூற்றுக்களின் பெறுமதிகளாவன அண்மித்த ரூபாய்க்களுக்கு அண்ணளவாக்கம் செய்யப்பட்டு இலங்கை ரூபாயில் முன்னளிப்பு செய்யப்பட்டுள்ளது

3. வருமானத்தை அங்கீகரித்தல்

கணக்கியல் காலப்பகுதியில் பரிமாற்றம் மற்றும் பரிமாற்றம் அல்லாத வருமானங்களாவன காசுப் பற்றுச்சீட்டினை அடிப்படையாக கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டன என்பதுடன் வருமானத்திற்குரிய காலப்பகுதியானது புறக்கணிக்கப்பட்டுள்ளது

4. சொத்து, ஆதனம், மற்றும் கருவிகளினை அங்கீகரித்தலும் மற்றும் மதிப்பீடு செய்தலும்

சொத்து, ஆதனம் மற்றும் கருவிகள் என்பன அவற்றின் மூலம் பெறக்கூடிய எதிர்கால பொருளியல் நன்மைகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

சொத்து, ஆதனம் மற்றும் கருவிகள் என்பன கிரய விலையில் மதிப்பீடு செய்யப்பட்டன மற்றும் கிரய மதிப்பீடு இல்லாதவிடத்து மீள் பெறுமான மதிப்பீடு பயன்படுத்தப்பட்டுள்ளது.

5. சொத்து, ஆதனம் மற்றும் கருவிகள் ஒதுக்கீடு

சொத்து, ஆதனம் மற்றும் கருவிகள் கணக்குடன் தொடர்புற்ற வகையில் மீள் பெறுமான ஒதுக்கீடு கணக்கு உள்ளது.

6. காசும் காசிற்கு சமமானவையும்

காசும் காசிற்கு சமமானவையும் எனும்போது அதற்குள் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறாக கையிலுள்ள தாள் நாணயங்கள், சில்லறை காசுகள் என்பனவற்றை உள்ளடக்கும்.

3.5 வருமான சேகரிப்பின் செயலாற்றுகை ஏற்புடையதன்று

பொருத்தமற்றது

3.6 ஒதுக்கீடு பயன்படுத்துதல் பற்றிய செயலாற்றுகை

ஒதுக்கீட்டின் வகை	ஒதுக்கீடு		உண்மை செலவினம்	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடானது இறுதி ஒதுக்கீட்டின் நூற்றுவீதமாக
	மூலநிலை	இறுதி		
நடப்பு	6,172,960,000	6,202,905,000	5,956,656,060	96%
மூலதனம்	4,656,050,000	4,659,455,000	4,078,948,582	88%
மொத்தம்	**10,829,010,000**	**10,862,360,000**	**10,035,604,642**	**92%**

3.7 ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்கள் என்பனவவற்றின் பிரதிநிதி என்ற வகையில் இந்த திணைக்களம் / பிரதேச செயலகம் / மாகாண சபை ஆகியவற்றிக்கு நிதி ஒழுங்கு விதி 208 இற்கு அமைவுற செலவுகளின் நிமித்தம் வழங்கப்படும் ஒதுக்கீடு

தொடர் இல.	அமைச்சு / திணைக்களம் ஆகியவற்றில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டின் நோக்கு	ஒதுக்கீடு		உண்மை செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் வீதமாக ஒதுக்கீட்டு பயன்பாடு
			மூலநிலை	இறுதி		
1	கல்வி அமைச்சு	13 வருட கல்விக்கான உத்தரவாதம்	5,238,150	5,238,150	5,238,150	100%
2	ஓய்வூதிய திணைக்களம்	அரச அலுவலர்கள் முற்பணம் ஓய்வுபெற்ற அலுவலர்களின் நிலுவை தொகை அறுதியீடு செய்யப்படல் (திருமதி. சமந்த டயஸ்)	185,000	185,000	185,000	100%
3	தேர்தல் திணைக்களம்	தேர்தல் அலுவலர்களுக்கான கொடுப்பனவினை மீள் நிரப்பல் செய்வதற்காக	1,091,156	1,091,156	1,091,156	100%
4	கல்வி மறுசீரமைப்பு,திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தொலைகற்கை	13 வருட கல்விக்கான உத்தரவாதம்	67,498,976	67,498,976	67,498,976	100%

	மேம்படுத்துகை இராஜாங்க அமைச்சு					
5	அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	பயிலுனர் பட்டதாரிகளுக்கு மாதாந்த படி கொடுப்பனவு	7,286,666	7,286,666	7,286,666	100%

3.8 அறிக்கை செய்யப்படும் நிதியல்லா சொத்துக்களின் செயலாற்றுகை

சொத்தின் குறியீடு	குறியீடு விபரம்	2020.12.31 இல் உள்ளபடியான இருப்பு மதிப்பீடு அறிக்கைக்கு அமைவுற மிகுதி	2020.12.31 இல் உள்ளபடியான நிதி நிலைமை அறிக்கைக்கு அமைவுற மிகுதி	கணக்கீடு செய்யப்பட வேண்டியது	அறிக்கை செய்யப்படும் முன்னேற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	1,648,514,058	1,648,514,058		100%
9152	இயந்திரம் மற்றும் கருவிகள்	598,908,884	598,966,701		99%
9153	நிலம்	1,494,318,140	1,494,318,140		100%
9154	தொட்டுணர முடியா சொத்துக்கள்				
9155	உயிரியல் சொத்துக்கள்				
9160	நடைமுறை வேலை வளர்ச்சி	1,162,800,000	1,162,800,000		100%
9180	குத்தகையிடப்பட்ட சொத்துக்கள்	-	-		

3.9 கணக்காளர் நாயகத்தின் அறிக்கை

VTY/B/MSDVT/FA/2020 2021 ஜூன் 22

சிரேஷ்ட கணக்கியல் அலுவலர்

திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க, இராஜாங்க அமைச்சு

திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க, இராஜாங்க அமைச்சின் 2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கை

.....

1. நிதிக்கூற்றுக்கள்

.....

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

……..……..…

திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க, இராஜாங்க அமைச்சின் 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று என்பனவற்றை உள்ளடக்கிய 2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் நிதிக்கூற்றுக்களாவன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19ம் இலக்க, தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 11(2) இன் ஏற்பாடுகளுக்கு அமைவுற வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் 154(6) அறிக்கைகள் என்பன சிரேஷ்ட கணக்காய்வு அலுவலருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும். 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் நிபந்தனைகளுக்கு அமைவுற விஞ்ஞான தொழினுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சின் நிமிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துக்களும் அபிப்பிராயங்களும் இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளது. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் தொடர்புற்ற வகையில் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10வது பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்கு அமைவுற சமர்ப்பிக்கப்படுவதற்குள்ள கணக்காய்வு தலைவர் அதிபதியின் அறிக்கையானது பாராளுமன்றத்திற்கு காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க, இராஜாங்க அமைச்சின 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்..

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் மீதான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பற்றிய பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 சிரேஷ்ட கணக்கியல் அலுவலர் மற்றும் கணக்கியல் அலுவலர்களின் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கும் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கவும் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு சிரேஷ்ட கணக்கியல் அலுவலர் பொறுப்பாக உள்ளார். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சானது வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளிலுள்ள நிபந்தனைகளுக்கு அமைவுற, ஒரு வினைத்திறன் மிகு உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் அது பயன்பாட்டில் உள்ளது என்றும் அத்துடன், கூறப்பட்ட இம்முறைகள் பயனுறுதி மிக்க முறையில் பேணப்படுவதற்கு இம்முறைமை காலத்திற்கு காலம் மீள்நோக்கப்படுகின்றது என்பதையும் சிரேஷ்ட கணக்கியல் அலுவலர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் ,ந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அமைச்சின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது ஏனைய விடயங்களுடன் குறிப்பாக எனது கணக்காய்வு காலப்பகுதியின் போது என்னால் இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டின் குறைபாடுகள் உள்ளடங்களாக இனங்காணப்பட்ட கண்டுபிடிப்புக்கள் தொடர்பில் கணக்காய்வு அலுவலருடன் நான் உரையாடினேன்.

1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6(1)(ஈ) விலுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவுற கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட விடயங்களை நான் முன்வைக்க விரும்புகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய வருடத்து நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைப்புகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

1.6 நிதியியல் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 2020 ஆம் ஆண்டிற்கான செலவினங்களினை அறிக்கை செய்தல்

2020 ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானியில் அதி மேதகு சனாதிபதி அவர்களினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலினை தொடர்ந்து தலைப்பு 421 திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க, இராஜாங்க அமைச்சு நடைமுறைபடுத்தப்பட்டது. மேற்கூறப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவுற, அந்நேரத்து அமைச்சான, தேசிய கொள்கைகள், பொருளியல் விவகார, மீள் குடியேற்ற மற்றும் புனருத்தாபன, வட மாகாண அபிவிருத்தி, தொழில் கல்வி மற்றும் திறன் விருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் 60 வாக்குப்பண விடயங்களின் கீழ் 2020 ஜனவரி மாதத்திலிருந்து 2020 ஆகஸ்ட் 31 வரையில் செலவிடப்பட்ட ரூபாய் 3,144,126 மில்லியன் ஆனது, இந்த அமைச்சின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. திறைசேரி அக்கறைத்தொகையினை பெற்றுக்கொள்ளல் மற்றும் அறுதியீடு செய்தல் என்பன அமைச்சினால் அந்நேரத்து அமைச்சினது அக்கறைத் தொகைக்குரித்தான கணக்கிலக்கத்திற்கு அமைவுற முன்னெடுக்கப்பட்டது. கூறப்பட்ட அக்கறைத் தொகைக்குரித்தான கணக்கிலக்கத்தின் கீழ் ரூபாய் 817,128 மில்லியன் கிடைக்கப்பெற்றுள்ளது என திறைசேரி அக்கறைத்தொகை கணக்கீட்டு கூற்றில் குறிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த அமைச்சானது, 2020 செப்டம்பர் 1 ஆம் திகதியிலிருந்தே செயற்பட தொடங்கியிருந்ததால், திறைசேரியிடமிருந்து வருட இறுதி வரையில் அதற்கு கிடைக்கப்பெற்ற அக்கறைத்தொகை ரூபாய் 1,727,390 மில்லியன் ஆகும் என்பதுடன் அந்நிதியத்தில் மிகுதி எதுவும் இல்லை.

2. நிதியியல் மீளாய்வு

2.1 செலவினங்களினை முகாமைத்துவம் செய்தல்

நிதியியல் ஒழுங்கு விதி 50 இலுள்ள நிபந்தனைகளுக்கு அமைவுற, தேவைப்படும் நிதியத்தினை பெற்றுக்கொள்வதற்கு அவசியமாக இருக்கும் மதிப்பீடுகள் தயாரிக்கப்படாததாலும் அத்தோடு அமைச்சின் இலக்கு மற்றும் குறிக்கோள்களினை சாதிக்கும் நோக்குடன் தயாரிக்கப்பட்ட செயல் திட்டமானது உறுதி படுத்தப்படுவதற்கும், ஒதுக்கீடுகள் செலவு செய்யப்படாது எஞ்சியுள்ள கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த மதிப்பீடுகளின் கீழ் 10 வாக்குப்பண விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபாய் 184,850,000 ஆனது எதுவித தேவைகளுக்கும் பயன்படுத்தப்படவில்லை.

(ஆ) ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவுடன் தொடர்புடைய 03 வாக்கு பண விடயங்களுக்கு மிகை நிரப்பு மதிப்பீடுகளின் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய் 12,260,000 ஆனது மொத்தமாக செலவிடப்படாது எஞ்சியிருந்தது.

(இ) சம்பந்தப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளினை சாதிப்பதற்கு நிதியமானது சரியான முறையில் பயன்படுத்தாத காரணத்தினால், 16 வாக்குப்பண விடயங்கள் தொடர்பிலான மதிப்பீடுகள் நிமித்தம் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டு தொகையான ரூபாய் 289,937,000 இல் ரூபாய் 147,201,662 ஆனது செலவிடப்படாது எஞ்சியிருந்தது, இது 34% இலிருந்து 75% வரையாகும்.

2.2 முற்பண கணக்கு மீதிகள்

(அ) கணக்காய்வின் போது கீழ் வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறாக நோக்குமிடத்து கடன் நிலுவை தொகை ரூபாய் 522,270 என அவதானிக்கப்பட்டது. இது அலுவலர்கள் தமது கடன்களினை திருப்பிசெலுத்தாது நிலுவையாக வைத்து விலகிச் சென்றதால் அல்லது ஓய்வுபெற்றதினால் ஏற்பட்டதாகும். இந்த நிலுவைக்குரிய காலவரையறை 02 வருடங்களில் இருந்து 20 வருடங்கள் வரையில் ஆகும்.

2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுக்குள் நுழைதல்

(அ) 2017 ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதியிடப்பட்டதும் 255/2017 எனும் இலக்கத்தினை கொண்டதுமான அரச கணக்குகள் சுற்றறிக்கையிலும் மற்றும் 94(3) எனும் இலக்கத்தினை கொண்ட நிதி ஒழுங்கு விதியிலும் விதித்துரைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்காததினால், வருட இறுதியில் 07 வாக்குப்பண விடயங்கள் தொடர்பிலான பொறுப்புக்களுக்கும் மற்றும் எஞ்சிய மிகுதிக்கும் சீராக்கங்கள் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து, தேறிய ஒதுக்கீட்டினை விட ரூபாய் 584,400 இனால் மொத்த செலவினத்தொகையானது அதிகரித்து காணப்பட்டது.

(ஆ) சகல பொறுப்புக்களும் 255/2017 எனும் இலக்கத்தினை கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைவுற பதியப்படல் வேண்டுமென இருந்த போதிலும் ரூபாய் 189,770 பெறுமதியான பொறுப்புக்களாவன மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் பொறுப்புக்கள் பதிவேட்டில் பதியப்படவில்லை.

2.4 விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரிசீலனைகளின் போது விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதோடு அவை கீழே காட்டப்பட்டுள்ளது.

	தொடர்புடைய விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள்	இணங்காமை
(அ)	நிதி ஒழுங்கு விதி 1646	ஒவ்வொரு மாதத்தினதும் நாளாந்த ஓட்ட அட்டவணையுடன் போக்குவரத்து தொடர்பிலான பொழிப்புரையின் மூலப்பிரதியானது கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்கத்திற்கு அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என இருந்த போதிலும் அமைச்சானது இந்த தேவைப்பாட்டுடன் இணங்குவதற்கு தவறி உள்ளது.
(ஆ)	நிதி ஒழுங்கு விதிகள் 756, 757 மற்றும் 1647 (ஆ)	வாகனங்கள் மற்றும் அமைச்சின் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவிற்குரிய மேலதிக உபகரணங்கள் ஆகியவை தொடர்பில் வருடாந்த இருப்பு மதிப்பீடு முன்னெடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அப்பணியானது செய்யப்படவில்லை
(இ)	2016 டிசம்பர் 29 ஆம் திகதியினையும் 30/2016 எனும் இலக்கத்தினையும் கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 எனும் இலக்கத்தினை உடைய பந்தி	எரிபொருள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு பரிசீலனையினதும் பின்னர் 12 மாத இடைவெளியில் அல்லது மொத்தமாக 25,000 கிலோமீட்டர் ஓடிய பின்னர் அல்லது எந்திரத்திற்கு ஒரு பெரிய திருத்தத்தை செய்த பின்னர் அதாவது இவற்றில் எது முன்னதாக இடம்பெறுகின்றதோ அதற்கு பின்னர் இன்னுமொரு எரிபொருள் பரிசீலனை முன்னெடுக்கப்படல் வேண்டும் என இருந்த போதிலும் இத்தேவைப்பாடு பின்பற்றப்படவில்லை.

2.5 வரையறை விஞ்சப்படல்

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுடன் தொடர்புடையதும் 02 வருடங்களினை விட அதிக பழமையானதும் ரூபாய் 301,312 பெறுமதியினை கொண்டதுமான வைப்புக்களாவன நிதி ஒழுங்கு விதி 571(2) இற்கு அமைவுற அரச வருமான கணக்கில் வரவு வைக்காது மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் இறுதி வரையில் பொது வைப்புக்கள் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

3. தொழிற்பாடு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

(அ) தொழிற்கல்வி கற்கையினை பின்பற்றல் எனும் போக்கினை அதிகரிப்பதற்கான திறமுறைகளினை முறைவடிவமாக்கம் மற்றும் அமுல்படுத்துகை செய்வதற்கான பணியானது அமைச்சிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அமைச்சின் அகப்பாடெல்லைக்குள் அடங்கும் தொழிற்கல்வி நிலையங்களினால் முன்னெடுக்கப்படும் ஒரு சில கற்கை நெறிகளாவன மாணவர்களினை கவரும் விதத்தில் ஒரு முறையான நிகழ்ச்சித்திட்டத்தினை உள்ளடக்கி இல்லாததினால் இதில் பங்கு பெரும் மாணவர்களின் எண்ணிக்கையும் குறைவாகவே உள்ளது இதற்கமைவுற, உயர் எண்ணிக்கையான மாணவர்கள் உட்சேர்ப்பதற்கான வசதிகள் மற்றும் அதற்கான செயற்றிறன்கள் என்பன வழங்கப்பட்டிருந்த போதிலும் இந்த வளங்களினை பயன்படுத்தி பயனுறுதியுடனும் வினைத்திறனுடனும் அதீத எண்ணிக்கையான மாணவர்கள் சேர்க்கப்படாது தவறவிடப்பட்டிருந்தமை.

(ஆ) தொழில் சந்தையில் உயர் கேள்வி நிறைந்த துறைகள் சார்ந்த கற்கைநெறிகளில் மாணவர்களின் பதிவானது மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பதற்கு காரணம், அவர்கள் அந்த கற்கை நெறியியில் ஒரு சிலவற்றினை விரும்பாததாகும். இதன் காரணமாக குறிப்பிட்டு சொல்லத்தக்களவு மாணவர்கள் கற்கைநெறியினை விட்டு விலகிச் செல்வதுடன் அநேகமான மாணவர்கள், உயர் பிரபல்யத்தினை உடைய கற்கை நெறியினையே விரும்புகின்றனர்.

(இ) தொழில் கற்கை மற்றும் தொழினுட்பவியல் கல்வி என்பனவற்றினை இளைஞர்களுக்கு போதித்து அவர்களுக்கு முறையான தொழில் வழிகாட்டல்களினை செய்வதன் மூலம் இலங்கையில் வேறுபட்ட பிரதேசங்களில் இளைஞர்களிடையே நிலவுகின்ற வேலையில்லா பிரச்சனையினை தீர்ப்பதில் தொழில் வழிகாட்டல் ஆனது முக்கிய பங்கினை வகிக்கின்றது. இப்பணியினை பூரணப்படுத்தும் நோக்குடன், 331 பிரதேச செயலக பிரிவுகளுக்கு 259 திறன்கள் அபிவிருத்தி உதவியாளர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும், இந்த அலுவலர்களின் செயலாற்றலானது, மிகவும் மந்தமான முன்னேற்றத்தினை காட்டியமையினை கணக்காய்வு பரிசீலனையின் போது அறிந்துக்கொள்ளக் கூடியதாகவுள்ளது.

(ஈ) உயர் தரமான தொழில் பயிற்சியினை வழங்கும் முகமாக போதியளவு கல்வியறிவினை கொண்ட பதவியணியினர் ஆட்சேர்ப்பு செய்யப்படல் வேண்டும் என்பதுடன் அவர்களுக்கு, அவர்களது விடயத்துறையில் சிறந்த பயிற்சிகளினை போதிய அளவில் வழங்குதல் வேண்டும். எவ்வாறாயினும் மேற்கூறப்பட்ட தகைமைகளினை கொண்டில்லாது குறைந்த அனுபவத்தினை உடைய அறிவு புகட்டுனர்கள் அமைந்திருக்கின்றமை தெரிய வந்துள்ளது.

3.1.1 கருத்திட்டம் நடைமுறைபடுத்துகையில் தாமதம்

(அ) ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவின் மீளாய்வுட்குட்பட்ட காலப்பகுதிக்கான முன்னேற்ற அறிக்கைக்கு அமைவுற, மொத்த பெறுமானம் ரூபாய் 784.36 மில்லியனை கொண்ட 14 கருத்திட்டங்களினை ஆரம்பித்து நிறைவு செய்தல் வேண்டும் என திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கூறப்பட்ட இக் கருத்திட்டத்தின் வளர்ச்சியானது 34% இலிருந்து 89% வரையாகும் என்பதுடன் இக்கருத்திட்டங்களில் 11 கருத்திட்டங்களினது வளர்ச்சி வீதமானது 75% இற்கும் குறைவாகும் என கணக்காய்வுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) 2018 ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட "சமூக புத்தாக்க ஆய்வு கூடம்" எனும் கருத்திட்டதினதும் மற்றும் "தரமிழந்த மண்ணின் தரத்தினை மேம்படுத்துதல்" எனும் கருத்திட்டத்தினதும் கிரயச் செலவினம் முறையே ரூபாய் 80 மில்லியன் மற்றும் 70

மில்லியன் ஆகும் என்பதுடன் இக்கருத்திட்டங்கள் அந்த ஆண்டின் இறுதியில் பூரணப்படுத்தப்படல் வேண்டும் என இருந்த போதிலும் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் இறுதியில் நோக்குமிடத்து இக்கருத்திட்டங்களின் வளர்ச்சியானது முறையே 70% மற்றும் 64% மாகவே இருந்தது.

(இ) 2020 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவின் கீழ் 03 கருத்திட்டங்களினை அமுல்படுத்துகை செய்தல் பொருட்டு ரூபாய் 111 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் அக்கருத்திட்டங்கள் தொடர்பில் எதுவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாததினால் மொத்த ஒதுக்கீட்டு தொகையும் செலவிடப்படாது எஞ்சி இருந்தது.

(ஈ) சமுத்திரவியல் பல்கலைக்கழகத்தில் உயர் தரமான கற்கைநெறிகளாவன முன்னெடுக்கப்படல் வேண்டும் என்ற நோக்குடன் கொரிய சர்வதேச கூட்டுறவு முகவராண்மையானது (முழுஜஊயு), விஸ்தீரணமான வளாகத்துடன் கூடிய புதிய பல்கலைகழக மொன்றினை விருத்தி செய்வதற்காக கடன் வசதிகள் வழங்கிய போதிலும், இந்நோக்கத்திற்கு பொருத்தமான புதியதொரு நிலத்தினை 2017 ஆம் ஆண்டிலிருந்து தேடிப்பெற்றுக்கொள்வதற்கு இயலாது இருந்ததால் இக்கருத்திட்டம் தொடர்பிலான செயற்பாடுகளாவன மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் இறுதி வரையில் ஆரம்பிக்கப்படாது இருந்தது.

3.1.2 நிதியங்கள் விடுவிப்பு செய்யப்பட்ட போதிலும் எதுவித வளர்ச்சியினையையும் சாதிக்காத கருத்திட்டங்கள்

கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி சமர்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ஆம் திகதி கிடைக்கப்பட்ட அனுமதிக்கு அமைவுற, ரூபாய் 35 மில்லியன் தொகை பணமானது சமூக புத்தாக்க ஆய்வுகூடத்தின் தாபிப்பு நிமித்தம் செலவிடப்படிருந்த போதிலும் இச்செலவிற்கு ஆதாரமாக எழுத்தினாலான சான்றுகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் போன்ற எதுவும் கணக்காய்வுக்கு சமர்பிக்கப்படவில்லை.

வெளிநாடுகளினால் நிதியீடு செய்யப்படும் கருத்திட்டங்களாவன வெளி வள திணைக்களத்திலும் மற்றும் வெளிநாட்டிலிருந்து கிடைக்கப்பெறும் உதவிகளாவன வருடாந்த பாதீடு மதிப்பீடுகளிலும் பதியப்படல் வேண்டுமென நிதி ஒழுங்கு விதிகள் 620 மற்றும் 621 என்பனவற்றில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கூறப்பட்ட இக்கருத்திட்டமானது, அவ்வாறு செய்யாதிருந்தமையானது நிதி ஒழுங்கு விதிகளுடன் இணங்காத நிலையினை வெளிப்படுத்துகிறது என்பது அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

3.2 முகாமைத்துவ சொத்துக்கள்

கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வுட்குட்பட்ட வருடத்துடன் தொடர்புற்ற வகையில் முன்னெடுக்கப்பட்ட இருப்பு பட்டியல் மதிப்பீட்டு அறிக்கைகளுக்கு அமைவுற, நோக்குமிடத்து திறன் அபிவிருத்தி தொழில் கல்வி பிரிவில் 113 உருப்படிகள் மேலதிகமாகவும் மற்றும் 85 உருப்படிகள் குறைவாக இருப்பதும் அவதானிக்கப்பட்ட அதே வேளையில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவில் 221 உருப்படிகள் மேலதிகமாகவும் மற்றும் 273 உருப்படிகள் குறைவாக இருப்பதும் அவதானிக்கப்பட்டது. நிதி ஒழுங்கு விதி 752(2) அமைவுற இவ்விடயமானது முறையாக கையாளப்படவில்லை.

(ஆ) வாகனங்களின் பாவனை ரூபாய் 39.6 மில்லியன் பெறுமதியினை கொண்ட 11 வாகனங்கள் பாவிக்கப்படாது இருப்பதுடன் அவை ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதியிலிருந்து ஓடுவதற்கு பயன்படுத்தப்படவுமில்லை.

3.3 முகாமைத்துவ வினைத்திறனின்மை

கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) திறன்கள் தின கொண்டாட்டங்களினை ஒழுங்கமைப்பு செய்தலுடன் தொடர்புடைய முன்பிரச்சார மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகளினை முன்னெடுப்பதற்காக ரூபாய் 3,443,100 ஆனது திறன் அபிவிருத்தி பிரிவு கருத்திட்டத்திற்கு வழங்கப்பட்டு, ரூபாய் 1,705,000 கிரய செலவினத்தில் 22 காணொளிகள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், பிரச்சார செயன்முறையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக எதிர்பார்த்த விளைவுகள் இதன் மூலம் கிடைக்கப்பெறவில்லை.

(ஆ) யூரோ 42.5 மில்லியன் செலவில் ஹிங்குராங்கொடையில் முன்னெடுக்கப்பட உள்ள தேசிய தொழில் கல்வி பயிற்சி நிலையத்துடன் தொடர்புற்ற வகையில் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 20 கற்கை நெறிகளினை நடாத்தக்கூடிய வகையில் 05 பயிலுனர் பாடசாலைகள், வெளிநாட்டு பயணிகளுக்கு 14 அறைகள் ஒதுக்கீடு செய்த பின்னர் 450 மாணவர்கள் தங்குவதற்கான அறைகள், அலுவலர்களின் நிமித்தம் 120 அலுவலக பணிமனைகள் மற்றும் உட் கட்டமைப்பு வசதிகள் என்பனவற்றினை உள்ளடக்கிய வகையில் ஒரு தேசிய தொழில் பயிற்சி நிலையத்தினை நிர்மாணித்தல் தொடர்பிலான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளாவன 2017 ஆம் ஆண்டில் இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபையின் கீழ் தொடங்கப்பட்ட போதிலும் இத்தகைய வசதியின் தாபிப்பு தொடர்பில் அதிகார சபையின் தேவைப்பாடுகள் ஏதேனும் உள்ளதா என்பது தொடர்பில் எதுவித விசாரிப்புகளும் முன்னெடுக்கப்படவில்லை.

